விலை ரூபா: 15.00

-Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 10 புதன்கிழமை (24.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 95

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## நயினாதீவு நாகவிகாரைப் பகுதியை புனிதப் பிரதேசமாக்குவதற்கு முயற்சி!

(கொழும்பு)

நயினாதீவு நாகவிகாரைப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகவிகாரைக்குத் தென்பகுதி பௌத்த மக்கள் அதிகளவில் வழிபாட்டுக்கு வருவதால் அப் பகுதியைப் புனித பிரதேசமாக மாற்ற ஏற்பாடுகள் இடம்பெறுவதாக அத் தகவல்கள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரிலுள்ள திலீபன் நினைவுத் தூபி இனந்தெரியாதோரால் முற்றாக அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபி முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு வாகனத்தில் வந்த சிலரால் இத் தூபி அழிக்கப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உடைக்கப்பட்ட தூபியின் சில பகுதிகள் அருகில் உள்ள குளத்தடியில் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர்கள் குழுவை அமைத்தால் வீட்டோ அதிகாரம் ஐ.நா.மீது பாயும்

## சீனாவும் ரஷ்யாவும் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை ஆராய ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் பான் கீ மூன், நிபுணர் குழுவை அமைத்து அதன் அறிக்கையைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தால் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சீனாவும் ரஷ்யாவும் எச்சரித்துள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)



சேதமாக்கப்பட்ட தூபி

## ஜானக பெரேராவின் கொலை வழக்கு 8 சந்தேக நபர்கள் விடுதலை

(கொழும்பு)

அநுராதபுரத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் பலியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 8 சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இக் குண்டுத் தாக்குதலில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 36 பேர் உயிரிழந்தனர். இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது (20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உள்ள வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து வரும் மக்கள் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வழிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக வன்னி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சங்கரப்பிள்ளை சுதாகரன் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது,

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து புனர்வாழ்வு முகாம்களில் தங்கியுள்ள ஆயிரத்து 500 ற்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்காக அதே புனர்வாழ்வு முகாம்களில் 11 இடங்களில் வாக்களிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்ட யோசனை மே மாதம் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்ட யோசனை எதிர்வரும் மே மாதம் சமர்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி லங்கா தீப செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டதன் பின்னர் விரைவில் வரவு-செலவுத் திட்ட யோசனை முன்வைக்கப்படும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின் காரணமாக கடந்த நவம்பர் (20 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வேலை ஆட்கள் உடன் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான புடைவை வியாபார நிலையத்துக்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. மேலும் அனுபவமுள்ள கணக்காளரும் (ஆண்) தேவை.

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: 021 222 9286

(948)


# தொழிற்சங்க மகா சம்மேளனத்தின் விசேட கலந்துரையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அரச ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும், அதற்கான தீர்வுகளும் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்ராலின், யாழ். மாவட்டத் தலைவர் க.சதீஸ் அரச தாதியர் உத்தியோகஸ்தர் சங்கத்தைச் சேர்ந்த பி.பி.சிவயோகம், தபால் தொலைத் தொடர்புகள் அலுவலர் சங்கத் தலைவர் யோ.இம்மானுவல், அரச தாதியர் உத்தியோகத்தர் சங்க செயலாளர் சமன் ரத்னப்பிரிய, இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தைச் சேர்ந்த சாகிய சந்திரகுமார, தொலைத் தொடர்புகள் அலுவலர் சங்கத்தைச் சேர்ந்த நவரட்ண பண்டார ஆகியோர் கருத்துறை வழங்குவர்.

சகல தொழில் சங்கங்களின் அங்கத்தவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள், புதிதாக தொழில்சங்கங்களில் இணைய விரும்பும் இளம் அரச அலுவலர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதுடன் தங்களின் தொழில் சார் பிணக்குகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ளுமாறு தொழில் சங்க மகா சம்மேளனம் கேட்டுள்ளது. (எ-3)


# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010



எம் தாயக உறவுகளே
பல்லாண்டு கால யுத்தத்தில்
சிதைந்துபோன சமூகத்தையும்
அழிந்து போன எமது
பிரதேசத்தையும் வளமாக்க
வாக்களிப்போம்.
வெற்றியின் சின்னம் வெற்றிலை
சேவையின் சிகரம்
அமீன் அவர்களை ஆதரிப்போம்

M.A.C.M. அமீன்
(யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு X 2

(590)


# மீளக்குடியமர்ந்த மக்களிற்கான உதவுதொகை கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்குக்கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் நீகோட் ஊடக மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் உதவுதொகை 17ஆவது நாளாக இன்று வழங்கப்படுகின்றது.

உதவுத் தொகை பெற்றுக்கொள்பவர்கள் வசிக்கும் கிராம சேவகர் பிரிவுகளும் அக்கிராம சேவகர் பிரிவுகளில் வசிப்போர் அதற்கான அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்களும் வருமாறு,

**யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு**

ஜே/61, ஜே/62, ஜே/63, ஜே/64, ஜே/65, ஜே/66, ஜே/67, ஜே/68, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/74,ஜே/75,ஜே/76,ஜே/77,ஜே/78,ஜே/79,ஜே/80,ஜே/81,ஜே/82,ஜே/83,ஜே/84, ஜே/85,ஜே/86,ஜே/87,ஜே/88 காலை 9 மணி யாழ்ப்பாண பிரதேச செயலாளர் மண்டபம்.

**கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260, ஜே/261, ஜே/262, ஜே/263, ஜே/264, ஜே/265,ஜே/266,ஜே/267,ஜே/268,ஜே/269,ஜே/270,ஜே/271,ஜே/272,ஜே/273,ஜே/274,ஜே/275,ஜே/276,ஜே/277,ஜே/278,ஜே/279,ஜே/280,ஜே/281, ஜே/282, ஜே/285, ஜே/286, ஜே/2[illegible] காலை 9 மணி கோப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகம்.

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு**

ஜே/91, ஜே/92 ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/102, ஜே/103, ஜே/104, ஜே/105, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109, ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/122, ஜே/123, ஜே/124, ஜே/125, ஜே/126, ஜே/127, ஜே/128 மாலை 3 மணி நல்லூர் பிரதேச செயலாளர் மண்டபம். (எ-14)


# தபால் மூல வாக்காளப் பெருமக்களே!

## சிந்தித்து வாக்களியுங்கள்.



5 கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை (முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்)



3 க.ஜெகசோதி (அகில இலங்கை சமாதான நீதவான்)



4 க.துஸ்யந்தன் (சிறப்புக் கலைப்பட்டதாரி)



6 ப.கமலதாசன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்)



8 வை.செகராசசிங்கம் (பசுமைப் புரட்சியாளன்)



9 வ.யோகானந்தசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்)



11 சு.மரிசலீன் (யேசு மாஸ்ரர்) (ஓய்வு பெற்ற அதிபர்)



12 கவிஞர் சோ.பத்மநாதன் (முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர்)

சுயேட்சைக்குழு-10 X

இம்முறையாயினும் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பயனுள்ளதாக்குவோம்

(சி-4804)


# மாநகர சபை தேர்தல் வாக்குறுதி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது

## அமைச்சர் டக்ளஸ் உரை

தமிழ் மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியில் புதிய மாநகரசபையின் கட்டிடம் கட்டியமைக்கப்படும் என்று ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை யின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, மிக நீண்டகாலமாக குடாநாட்டுமக்கள் அனைவராலும் எதிர்பார்க் கப்பட்டிருந்த முக்கியத்துவம் மிக்க ஓர் கட்டிடத் தொகுதிக்கான அடிக் கல்லை இன்று நான் நாட்டியுள்ளேன் இந்த பணிகள் அனைவரின் ஒத்துழைப்புடன் வெகுவிரைவில் செய்து முடிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மாநகரசபைக்காக தேர்தலின் போது எமது விஞ்ஞாபனத்தில் முதன்மை விடயமாக இதையே குறிப்பிட்டிருந்தோம். மக்கள் எம்மை வெற்றியடைய செய்தார்கள். இன்று எமது வாக்குறுதியை நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். மக்கள் ஓரணி திரண்டு எமக்கு ஆதரவு தந்தால் அவற்றை எம்மால் நிச்சயம் செய்து முடிக்க முடியும். நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் எமது கரங்களை எமது மக்கள் பலப்படுத்தினால் இரண்டே வருடத்தில் அனைத் தையும் மீளக்கட்டியெழுப்பமுடியும். எமக்கு மக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு என்றார். (எ)


# இறைச்சிக் கோழி தேவை

சங்கானையில் அமைந்துள்ள 'அச்சயா உணவகத்திற்கு உடன் இறைச்சிக் கோழிகள் தேவை.

தொடர்புக்கு: து. தயாளன்

077 4278830

(939)



# யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தக கண்காட்சி 2010

இடம்: யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
யாழ். மத்திய கல்லூரி

காலம்: 27, 28,29 மார்ச் 2010 (சனி, ஞாயிறு, திங்கள்)

அனுமதி இலவசம்

அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுவதோடு விசேட கழிவு விலையில் பொருட்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

(சி-4755)



# மானிப்பாயில்............



**100% Practical Education!!**

பல புதிய விடயங்களுடன்

28/03/2010 அன்று பிரிவு - 01 ஆரம்பம் !!

**Diploma in Mobile Phone Repairing**

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-

UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 021 7429325 / 0777 110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

(சி-4772)



# உடன் தேவை

பின்வரும் பதவிகளுக்கு பெண்பிள்ளைகள் தேவை.

- போட்டோ பிரதி எடுப்பவர்கள்
- கணனி (தமிழ், ஆங்கிலம்) முன்னனுபவமும் ஆங்கில அறிவும் அவசியம். (சம்பளம் 10000/-)

தொடர்புக்கு:
071 4750132

(சி-4767)

# இன்று ஒரு தகவல்

## உயர்வு நவிற்சி

எனக்குத் தெரிந்த கவிஞர் ஒருத்தர் ஒருநாள் என்னைத் தேடி வந்தார். வந்ததிலிருந்து சோகமாக காணப்பட்டார். என்னவென்று விசாரித்தேன்.

அவருடைய மனைவி அவரைத் திட்டிவிட்டாராம். அதை அவர் என்னிடம் எப்படிச் சொன்னார் தெரியுமா?

"அவள் தன்னுடைய சொல் அம்புகளால் என் இதயத்தைத் துளைத்து விட்டாள்" என்றார்.

கவிஞரல்லவா அதுதான் அப்படிச் சொன்னார்.

அதுசரி! நிஜமாகவே அந்த அம்மா அப்படியா செய்தார். இவருடைய இதயம் என்ன ஓட்டையாகவா போய்விட்டது?

அப்படியில்லை.

கவிஞர் அதை மிகைப்படுத்திச் சொல்கிறார். அவ்வளவு தான். இலக்கியத்தில் இதை உயர்வு நவிற்சி என்று சொல்கிறார்கள்.

உயர்வு நவிற்சி என்பது இலக்கியத்தில் ஒரு அணி. அதாவது அப்படிச் சொல்வதே ஒரு அழகு! கவிதையில் இப்படிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால் இதையே எல்லா இடத்திலும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

ஒரு டாக்டரிடம் போய் "என் மனைவி சொல் அம்புகளால் என் இதயத்தை துளைத்து விட்டாள் டாக்டர்" என்று சொன்னால்...

காயம் 'பலமா, லேசா' என்று கேட்பார்.

இப்படி மிகைப்படுத்திச் சொல்வது இலக்கியத்திற்கு நன்றாக இருக்கும். ஆனால் விஞ்ஞானத்துக்கு அது சரிவராது.

ஒரு விஞ்ஞானி பரிசோதனை செய்கிறார். இரண்டு திரவத்தை ஒன்றாகக் கலக்கிறார். பளபளவென்று ஒரு திரவம் உண்டாகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உடனே அது எப்படி இருக்கிறது என்பதை உள்ளது உள்ளபடியே குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அவரே அந்தப் பளபளப்பில் மயங்கி

''ஆகா! என் கண்ணையே பறிக்கிறதே! இது என்ன பொன்னோ – முத்தோ – வைரமோ – வைடூரியமோ," என்று பேச ஆரம்பித்து விட்டால், விஞ்ஞானம் என்னத்துக்கு ஆகிறது?

யதார்த்தத்தை விட்டு விலகிப் போனால், உண்மையின் தன்மை, சிதைந்து போய்விடும். அறிவியல் அம்சம் குறைந்து விடும்.

விஞ்ஞானிகளும் கவிஞர்களும் ஒரே விடயத்தில் சம்பந்தப்பட்டால் சில சிக்கல்கள் வரலாம். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்.

ஒரு கணவன் – மனைவி.

கணவர் ஒரு கவிஞர். மனைவி ஒரு விஞ்ஞானப் பேராசிரியை. அந்தக் கணவர் தன் மனைவியின் அழகைப் பாராட்டி ஒரு கவிதை எழுதப் போகிறேன் என்று சொன்னார்.

'எதற்கும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்க' என்று சொல்லிவைத்தேன்.

"இதில என்னசார் எச்சரிக்கை வேண்டியிருக்கு? நீங்க சும்மா இருங்க' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அதன்பின் இரண்டுநாள் கழித்து என்னிடம் வந்து,

''சேர், நீங்க சொன்னது தான் சரி! நான் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்திருக்கலாம்" என்றார்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தேன்.

"ஒன்றுமில்லை. சேர் ஒரு கவிதை எழுதினேன். பெண்களுக்கு இடைமெலிந்திருப்பது அழகு. அதுதான் பல கவிஞர்கள் அதை 'நூல் இடை' என்று ஏற்கனவே பாடியிருக்கிறார்கள்.

நான் இன்னும் ஒருபடி மேலே போய் 'இல்லாத அவள் இடையை' என்று எழுதினேன்.

அதாவது இடை என்ற ஒன்று இல்லவே இல்லை என்று எழுதினேன். அதைப் படித்துவிட்டு என் மனைவி சண்டைக்கு வந்துவிட்டாள் ஏன்? என்று கேட்டேன்.

"எனக்கு இடையே இல்லை என்று எழுதியிருக்கிறீங்களே! அப்படியானால் நான் என்ன இரண்டு துண்டாகவா இருக்கிறேன்?" என்று கத்த ஆரம்பித்துவிட்டாள்.

நான் மெதுவாக சமாதானப்படுத்தி இல்லை என்று சொன்னால் நிஜமாகவே இல்லை என்று நினைத்துக் கொள்ளக் கூடாது என்று விளக்கம் கொடுத்தேன். சரியென்று ஒத்துக் கொண்டார்.

மறுநாட்காலையில் நான் சாப்பிட உட்கார்ந்தேன். வெறும் தட்டைக் கொண்டுவந்து வைத்து சாப்பிடுங்க என்று சொன்னாள்.

"இட்லி வைக்கவில்லையா" என்று கேட்டேன்.

"இல்லை" என்றாள்.

"என்ன இப்படிச் சொல்கிறாய்" என்றேன்.

"இல்லை என்று சொன்னால் நிஜமாகவே இல்லை என்று நினைக்கக்கூடாது. இருக்கிறதாக நினைச்சு சாப்பிடுங்க" என்று சொல்லிவிட்டு போய்விட்டாள் சேர்" என்று புலம்ப ஆரம்பித்தார் அந்தக் கவிஞர்.

அறிவியலும் அழகியலும் மோத ஆரம்பித்தால் அதன் விளைவு இப்படித்தான் இருக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சிறந்த நூல்களுக்கான பரிசுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாண சபைக்குட்பட்ட 5 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து, சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்களை வேண்டி நிற்கின்றது.

இதுகுறித்து யாழ். பிரதேச செயலர் அப்பிரதேச எல்லைக்குட்பட்ட எழுத்தாளர்களை பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றார்.

இதில் நாவல், சிறுவர் இலக்கியம், சிறுகதை, இலக்கிய ஆய்வும் விமர்சனமும், கவிதை, உயர்கல்வி, நாடகம், பல்துறை ஆகிய துறைகளில் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

போட்டி விதிமுறைகளாக ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம் எனவும் நூலாசிரியர் வடமாகாணத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். நூல்கள் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இடையில் அச்சில் வெளிவந்தவையாக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் போட்டிக்கு நான்கு நூல்கள் அனுப்பி வைக்க வேண்டும். நூலாசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முற்பதிவு மாத்திரம் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்கள் நூல்களை பதிவு அஞ்சல் மூலம் உதவிப் பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வரோதய நகர், வடமாகாணம், திருகோணமலை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-4)

# மே மாதத்திற்கு முன் ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள்

## கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(யாழ்ப்பாணம்)

சகல ஆசிரியர்களுக்குமான சம்பள நிலுவைகள் மே மாதத்திற்கு முன்னர் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள இடைக்கால நிதி ஒதுக்கீடு ஆசிரியர்களின் சம்பளங்களை கொடுப்பதற்கு மாத்திரமே போதியதாகும்.

அடுத்த மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும் என்றும் 30 ஆம் திகதிக்கு முன்னர் புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை செலுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் பண்டிகைக்கால முற்பணம் கல்விசாரா ஊழியர்களின் முற்பணமும் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து வழங்கப்படவிருக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஓ-4)

# மலகூட குழிகளுக்குப் பதிலாக நவீன கொள்கலன் அறிமுகம்

மாநகரசபை எல்லைக்குள் குடிசன அடர்த்தி அதிகரித்துள்ள பிரதேசங்களில் மலகூடங்களை அமைப்பதற்கான கட்டிட அங்கீகாரத்தினை வழங்குவதால் பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

குறிப்பாக சிறியதுண்டுக் காணிகளில் இவ்வாறான குழிகளை அமைக்கும் போது அருகிலுள்ள கிணற்றுநீர் மாசடைவதோடு சுகாதார சீர்கேடும் ஏற்படுவதற்கு சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறான நிலையில் மலக் குழிகளிலிருந்து கழிவுகள் வெளியேறாத வகையில் APRICO நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மலத்தாங்கிகளின் பாவனையின் மூலமாக மேற்கூறப்பட்ட அனைத்து சீர்கேடுகளும் இல்லாது ஒழிக்கும் நிலை உருவாகும்.

மாநகரசபை அலுவலகத்தினுள் மேற்படி நிறுவனத்தால் காட்சிப் படுத்தப்பட்டுள்ள மலத்தாங்கிகளை பார்வையிட்டு நியாய விலையான ரூபா 47,000 ற்கு பெற்று பயன்படுத்துமாறு மாநகர முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

இதன் பாவனை பற்றிய தொழில்நுட்ப உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு மாநகரசபை தயாராகயுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

(ஓ)

# இராசி பலன்

24-03-2010
(பங்குனி 10 , புதன்கிழமை)
நவமி முன்னிரவு 10.13 மணிவரை
திருவாதிரை முற்பகல் 8.42 மணிவரை
இராகுகாலம் 12.16 - 1.46 மணிவரை
சுபநேரம் 4.46- 6.16 மணிவரை
ஸ்ரீராமநவமி

| | |
|---|---|
| மேடம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண சுகம். |
| இடபம் | மனோ சங்கடம், பெரியோர் உதவி, முயற்சி தாமதம், தனவிரயம். |
| மிதுனம் | மாதர் நட்பு, புதிய திருப்பம், போசன சுகம், வெகுமானம். |
| கடகம் | காரிய தாமதம், சுபசெலவு, பிறருக்கு உதவுதல், ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, உற்சாகம், காரிய அனுகூலம். |
| கன்னி | ஆரோக்கிய நிலை, நண்பர்கள் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய். |
| துலாம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, உடல் நலம், வீண்பயம். |
| விருச்சிகம் | ஆரோக்கியக் குறைவு, பணக் குறைவு, முயற்சி தாமதம், மனக் கவலை. |
| தனுசு | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், மனோ தைரியம், கீர்த்தி. |
| மகரம் | எதிர்பாராத நன்மை, தொழில் விருத்தி, தேகநலன், நண்பர்கள் உதவி. |
| கும்பம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக்குறைவு, குடும்பக் கவலை. |
| மீனம் | மனச்சஞ்சலம், ரோகநிலை, அதிக பிரயாசை, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 35 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 35 | 45 | 40 |
| கரட் | 100 | 120 | 70 |
| பூசணி | -- | -- | 40 |
| புடோல் | -- | -- | 40 |
| வாழைக்காய் | 25 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | -- | -- | 50 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 90 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 90 | 100 | 90 |
| முருங்கைக்காய் | 180 | 220 | 240 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# கங்கையை புனிதமாக்க இன்னும் ஒன்பது ஆயிரம் கோடி தேவை

வடமாநிலங்களின் உயிர் ஆதாரமான கங்கையை சுத்தம் செய்வதற்கு இன்னும் 9 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என்று இந்திய திட்டக் கமிஷன் உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முக்கிய நதியான கங்கை உத்தரகண்ட் ,உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் முக்கிய வாழ்வாதாரமாக திகழ்கிறது. தொழிற்சாலை கழிவுகள் மற்றும் பல்வேறு வகைக் கழிவுகளால் கங்கை குப்பைகளைச் சுமக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் கங்கையைச் சுத்திகரிக்க 782 கோடி ரூபாயை மத்திய அரசு செலவிட்டுள்ளது. இருப்பினும் கங்கை சுத்தமாகுமா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

கங்கையில் போடப்படும் கழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும் போது அவற்றை நீக்குவதற்காக அரசு அமைத்து வரும் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது.

இது தொடர்பாக இந்தியத் திட்டக் கமிஷன் உயர் நீதிமன்றத்தில் கங்கை செயல் திட்டத்துக்கான நிதியின் பயன்பாடு மற்றும் அத்திட்டத்தின் பயன் என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கங்கை செயல் திட்டம் இன்னும் முழு வீச்சில் செயல்படவேண்டுமானால் அதற்கு இரண்டாயிரத்து 812 கோடி ரூபாயிலிருந்து ஒன்பதாயிரத்து 788 கோடி ரூபாய் வரை தேவைப்படும். கங்கை செயல்திட்டத்தின் நோக்கம் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. இப்போது தினமும் கங்கையில் குப்பைகள் மற்றும் கழிவுகள் சேர்கின்றன.

ஆனால் குப்பைகளை சுத்திகரிக்கும் நிலையங்களின் திறனோ வெறும் 375 கோடி லீற்றர் மட்டுமே. இது மொத்த குப்பை உற்பத்தியில் வெறும் 31 சதவீதம் மட்டுமே இந்த வேகத்தில் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல் செயல்திட்டத்தின் இறுதிக் காலமான 2020 க்குள் திட்டம் முடிவடையாது.

2020 இல் கங்கையில் நாள்தோறும் 1500 கோடி லீற்றராக குப்பைகள் சேரும் என்பது மதிப்பீடு. அதற்கேற்ப கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் விரைவில் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட வேண்டும். இப்போதுள்ள நிலையில் கங்கையை சுத்தப்படுத்த கூடுதலாக ஒன்பதாயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. காலதாமதமானால் இன்னும் அதிகமாக தேவைப்படலாம் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## திருடர்கள் பெண்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் ஏழாலையில் சம்பவம்

ஏழாலைப் பகுதியில் திருடர் இருவரை பெண்குழு மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.15 மணியளவில் ஏழாலை தம்புவத்தை ஞானவைரவர் வீதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில் தம்புவத்தை ஞானவைரவர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர் வீடு சென்ற சந்தர்ப்பம் பார்த்து மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் குறித்த பெண்ணின் தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

பிரஸ்தபா பெண்ணின் அழுகுரல் கேட்ட அயலில் உள்ள பெண்கள் ஒன்று திரண்டு இரு திருடர்களையும் மடக்கிப்பிடித்து நையப் புடைத்தனர்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்த வேளை சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் இரு திருடர்களையும் கைது செய்துள்ளனர். (2-7)

## கட்டாக்காலி மாட்டை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கிராம்புவில் வயல் பகுதியில் கட்டாக்காலி மாடு ஒன்று பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. அதன் நிறம் வெள்ளை. ஒரு பக்கத்தில் சூலம் குறியும் மறுபக்கத்தில் (து.ர) என்ற குறியும் உள்ளது. கல்வயல் விவசாய சம் மேளன செயலாளர் இல்லத்தில் கட்டப்பட்டுள்ளது.

உரியவர் நட்ட ஈட்டை செலுத்தி பெற்றுக் கொள்ளும்படியும் தவறின் கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பகிரங்க ஏல விற்பனை இடம்பெறும் என செயலாளர் கா. வேதநாயகம் தெரிவித்தார். (2-31)

## 40 அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளை இழக்க நேரிடும்–டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

எதிர்வரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் 40 அமைச்சர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை இழக்க நேரிடும் என போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 40 இற்கும் குறைவாக பேணுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி அரசியல் வாதிகள் என்ற ரீதியில் இந்தத் தியாகத்தை அமைச்சர்கள் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது நாட்டை புதிய சகாப்தத்திற்கு இட்டுச் செல்லும் நோக்கில் அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறைகளை பின்பற்றும் இதன் முதல் கட்டமாக தற்போதைய அமைச்சரவை எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப் பட உள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்யும் ஜனாதி பதியின் இலக்கை எட்டுவதற்கு நாம்பல்வேறு தியாகங்களை செய்வதற்குத் தயார் என்றார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயக தேசிய கூட்டமைப்பிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான இரகசிய ஒப்பந்தம் அம்பலப் பட்டுள்ளதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அண்மையில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் இந்த இரகசிய ஒப்பந்தம் வெளியிடப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

2001 ஆம் ஆண்டு அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையை50 வீதத்தால் குறைக்க முற்பட்ட ஐக்கிய தேசிய அரசாங்கம் தற்போது பொதுத்துறை ஊழியர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார் (2-4)














# மீண்டும் எழும் யாழ் மாநகரம்

யாழ்ப்பாணத்தின்
தனித்துவம்
பாரம்பரியம்
பண்பாடு
ஆகியவற்றை
உள்ளகத்தே கொண்டு
மீண்டும்
அதேவளாகத்தில்
புதிய

## யாழ் மாநகரசபை கட்டிடம்



புதிய மாநகரசபை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா (22.03.2010) நடைபெற்ற போதான காட்சிகள்



(சி-477)

# இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை

## ஜனாதிபதியின் சிபார்சில் ஏற்பாடு

இந்திய கிரிக்கெட் வீரர்கள் கௌதம் கம்பீர், ஆசிஷ் நெக்ராவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரில் இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஐ.பி.எல். 3 கிரிக்கெட் போட்டி நடந்து வருகிறது. இதில் டெல்லி அணியில் கௌதம் கம்பீர் ,ஆசிஷ் நெக் ராவும் இலங்கை கிரிக்கெட் வீரர் தில்ஷன் திலகரத்னேவும் விளையாடி வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் நடந்த கிரிக்கெட் போட்டியில் கம்பீரும் ஆசிஷ் நெக்ராவும் காயம் அடைந்தனர். இருவரும் காயம் அடைந்தது குறித்து இலங்கை வீரர் தில்ஷன் திலகரத்னே ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதையடுத்து கம்பீரும் நெக்ராவும் கொழும்பு வந்தனர். அவர்களிற்கு ஜனாதிபதி ஆயுர்வேத நிபுணர் எலியந்தா ஒயிட் மூலம் சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்து அத்தனை செலவுகளையும் பார்த்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சச்சின் டெண்டுல்கருக்கும் ராஜபக்ஷே சிபாரிசின் பேரில் இதே எலியந்தா சிகிச்சை அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-4)

# கோத்தபாய தொடர்பில் ஐ.ம.சு.கூ.வின் முக்கிய வேட்பாளர்கள் அதிருப்தி

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய வேட்பாளர்கள் அதிருப்தி கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்ட சில வேட்பாளர்களுக்காக கொழும்பு மாவட்டத்தில் தமது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்கிறார்.

இந்நிலையில் அதே கட்சியில் போட்டியிடுகின்ற மற்றைய வேட்பாளர்களின் பின்னடைவுக்கு இதுவே காரணம் என அமையலாம் என அவர்கள் கருதுகின்றனர்.

எனவே சிலர் இது தொடர்பில் கோத்தபாயவிடம் நேரடியாகதமது அதிருப்தியைவெளிப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர்களுக்கு மத்தியில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றுக் கொள்வதில் கடும் போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில் அவரின் புகழைப் பயன்படுத்தி தமது விருப்பு வாக்குகளை அதிகரித்துக்கொள்ளும் வகையில் ஒரு புதிய கொழும்பு மாவட்ட வேட்பாளர் அவரை தமது பிரசாரத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார். இதற்காக பெரும்தொகை பணம் கைமாறி இருப்பதாகவும் கூறப்படுகிறது. (2-4)

# களுத்துறை மத்துகம தொகுதியில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

களுத்துறை மாவட்டம் மத்துகம தொகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமைச்சர் ரோஹித்த அபயகுண வர்த்தவின் ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிய பின்னர் மத்துகம பிரதேசத்தில் விளையாட்டு திடல் ஒன்றில் இருந்த போது மோட்டார் சைக்கிளில் அங்கு சென்ற இரு இனந் தெரியாத ஆயுததாரிகள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.சம்பவத்தில் 29 வயதான லோறன்ஸ் பொஸ்ரின் என்பவரே உயிரிழந்துள்ளார். (2-4)

# திஸ்ஸ அத்தநாயக்கவிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் போது கடந்த் ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சோகவுக்கு பிரசாரத்திற்கு நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன

அண்மைக் காலமாக சரத்பொன்சேகா தேர்தல் பிரசாரங்களுக்காக நிதியைப் பெற்றுக்கொண்ட முறைகள் குறித்த குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

பொன்சேகாவுக்கு வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களும் விடுதலைப்புலிகளும் பணம் வழங்கியதாக அரசாங்கத் தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர். அத்துடன் அமெரிக்கா , அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல முக்கிய நாடுகள் அவருக்கு நிதி வழங்கி இருப்பதாகவும் அரசாங்கம் சந்தேகிக்கிறது. (2-4)

## சிறுவர்களை கடத்தி

# பிச்சை எடுக்க வற்புறுத்துகின்ற நடவடிக்கை தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

சிறுவர்களைக் கடத்திச் சென்று ரயில்களில் பிச்சையெடுக்க செய்யவைக்கும் நடவடிக்கைபற்றியதகவல்கள்வெளியாகியுள்ளன.

இவ்வாறான பிள்ளையொன்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் இவ்விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக ரயில்வே வணிக அத்தியட்சகர் விஜயசமரசிங்க குறிப்பிட்டார்.

கடத்தப்படும் பிள்ளைகளைக் கட்டாயத்தின் பேரில் ரயில் வண்டிகளில் பிச்சை யெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி சிலர் பணம் சம்பாதிக்கும் செயல்கள் சில காலமாக இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தகைய சிறுவனொருவனின் நடத்தையில் சந்தேகப்பட்டுப் பயணிகள் அச்சிறுவனை ரயில்வே பொலிசார் மற்றும் ரயில்வே அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அச் சிறுவனிடம் விசாரணைகள் நடத்தப்பட்ட போது இத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (2-4)

# 2010 இன் 2 ஆவது மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக இலங்கை தெரிவு

(கொழும்பு)

உலகில் மக்கள் விரும்பிச் செல்லக் கூடிய மிகச் சிறந்த 25 சுற்றுலாப் பகுதிகளில் 2010ஆம் ஆண்டுக்கான தேர்வில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

National Geography என்ற பிரபல சஞ்சிகை உலகளாவிய ரீதியில் இயற்கை அழகு நிறைந்த இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரலைத் தாக்கம் மற்றும் யுத்தத்தின் பின்னர் நாடு பழைய சூழலுக்குத் திரும்பியிருப்பதாகவும் இலங்கையின் இயற்கைச் சூழல் ரசிக்கக் கூடியதாக இருப்பதாகவும் அந்த சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதலா வது இடத்தை நேபாளம் பெற்றுள்ளது குறிப் பிடத்தக்கது. (2-4)

# உல்லாசப் பயணிகளின் தொகை மூதூரில் அதிகரித்து காணப்படுகின்றது

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழல் காரணமாக மூதூர் பிரதேசத்துக்கு பெருமளவிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பிரயாணிகள் தினமும் சென்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு செல்லும் உல்லாசப் பயணிகள் சேருவில 11 என்னும் கப்பல் மூலமாக சேருவில விகாரை, லங்கா பட்டண, நொக்ஸ் சுனாமி பிரதேசங்களையும் பார்வையிடு கின்றனர்.

காலையில் திருமலையிலிருந்து புறப்படும் உல்லாச பயணிகளில் உள்ளூர், வெளிநாட்டு பயணிகளும் அடங்குகின்றனர்.

மூதூர் துறைமுகத்தை வந்தடையும் பயணிகள் துறைமுக கடல் பரப்பில் நீராடி கடல் உணவுகளையும் இங்குள்ள மீன் வாடிகளில் வாங்கி லங்கா பட்டணத்துக் கொண்டு சென்று அங்கு சமைத்து உண்டு மகிழ்கின்றனர்.

வெளியூர் வாசிகளின் வருகையால் ஹோட்டல்களிலும் அதிகமான வியாபாரங்கள் இடம் பெறுவதால் அப்பிரதேச மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல்

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்சமயம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசித்தினம் அடுத்தமாதம் 5 ஆம் திகதி ஆகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் 80 சதவீத பாடசாலை வரவை கொண்டிருத்தல் வேண்டும்.

கடந்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களின் மறுபரிசீலனை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (2-6)





உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலய திருப்பலி பூசை வழிபாட்டு நிகழ்வில் திருச் சொரூபத்துக்கு தூப ஆராதனை நடைபெறுவதையும், அடியார்கள் காணிக்கைகளை எடுத்துச் செல்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் இராணுவத்தினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : ஜெரோம் குணராஜ்)

# இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளுக்கான வரிச்சலுகை இரத்துச் செய்யப்படுகின்றது

இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளுக்கான வரிச்சலுகை இரத்து செய்யப்பட்டுள்ளதாக அரிசி மொத்த வியாபாரிகள் சங்கத்தின் பிரதித்தலைவர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நிலவிய அரிசி தட்டுப்பாட்டின் காரணமாக இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரி 20 ரூபாவிலிருந்து ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டது.

எனினும், உள்நாட்டில் அறுவடைக் காலம் ஆரம்பமாகியுள்ளதனால் தேசிய சந்தையில் போதியளவு அரிசியை நிரம்பல் செய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

இதன் காரணமாக கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளுக்கு விதிக்கப்பட்ட வரி மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளுக்கு 20 ரூபா வரி அறவீடு செய்யப் படவுள்ளது.

குறிப்பாக பாஸ்மதி அரிசியின் விலை மட்டுமே இந்த வரி விதிப்பினால் அதிகரிக்கப் படும் என்றும் தற்போது 70 ரூபாவாக காணப் படும் பாஸ்மதி அரிசி ஒரு கிலோ எதிர்வரும் நாட்களில் 100 ரூபாவாக உயர்வடையக் கூடும் என்றும் கூறினார். (2-4)

## சிறுவர் முகாம்

யாழ் கல்வி வலய பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் விசேட கல்வி பிரிவில் இடம்பெறவுள்ளது.

இச் சிறுவர் முகாமில் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-7)

# யாழ், முல்லை- கிளி பகுதிகளில் பெருமளவான ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து கிளேமோர் கைக்குண்டுகள் மற்றும் பெருமளவான ஆயுதங்களை பாதுகாப்புப் படையினர் மீட்டெடுத்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதில் யாழ் மந்திகை பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலில் ஐந்து கிலோ எடையுள்ள கிளேமோர் குண்டு - 1, கைக்குண்டு மற்றும் வெடிக்க வைக்கும் கருவிகளும் கிளிநொச்சி விசுவமடு பிரதேசங்களில் நடத்தப்பட்ட பாரிய தேடுதலின் போது 60 மி.மீ ரக 55 மோட்டார் குண்டுகள், 3 கைக்குண்டுகள் மற்றும் உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவின் ஆண்டான் குளம், வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலின் போது ரி - 56 ரக துப்பாக்கிகள் - 02, துப்பாக்கி பாகங்கள் - 06, ரி 81ரக துப்பாக்கி ,9.9 மி.மீ பிஸ்டல் ரவைகள் - 600 மற்றும் 5.6 மி.மீ ரவைகள் - 700 மீட்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

## சான்றிதழ் வழங்கல்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சினால் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தினூடாக 2009 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற தொழிற்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த தொகுதி 1 பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சியை பூர்த்தி செய்த பயிற்சியாளர்கள் தவறாது சமூகமளித்து சான்றிதழினை பெற்றுக் கொள்ளுமாறு தெல்லிப்பளைப் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# 26 ஆயிரம் மாணவர்கள் இன்னமும் இடம்பெயர் முகாம்களில் கற்கின்றனர்

(கொழும்பு)

26 ஆயிரம் மாணவர்கள் இன்னமும் இடம்பெயர் முகாம்களில் தங்கியிருந்து கற்பதாக வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அங்கு காணப்படும் தற்காலிக பாடசாலைகளில் இவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் யுனிசெப் அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்பினால் இவர்களின் கல்வியை மேம்படுத்த முடிந்ததாக மாகாணக் கல்விச் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மேலும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தினந்தோறும் நடைபெற்று வருவதாகவும் 60 ஆயிரம் மாணவர்கள் ஏற்கனவே மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப் படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (2-6)

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

☞தேசிய அடையாள அட்டை,
☞செல்லுபடியாகும் கடவுச்சீட்டு,
☞குருமார் அடையாள அட்டை,
☞முதியோர் அடையாள அட்டை,
☞ஓய்வூதிய அட்டை,
☞செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்,

"இவற்றில் ஏதாவது ஒன்று உங்களிடத்தில் இல்லை எனில் உங்கள் வாக்கை அளிக்குமுகமாக தற்காலிக அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்"

தற்காலிக அடையாள அட்டை பெற்றுக் கொள்ள 1 1/4" x 1" அளவிலான புகைப்படம் 2 உடன் 30.03.2010 இற்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரை சந்திக்கவும்.

"இது பஃவ்ரலின் வேண்டுகோள்"

பஃவ்ரல் (சி - 4767) Canada

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

இனி ஒரு விதி செய்வோம்
திட்டத்தில் புதுமை, கருத்தில்
துணிச்சல், செயலில்
தீரமுடன் செயற்பட்டு
மறுமலர்ச்சி காண்போம்



திரு. செல்லத்துரை சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற அதிபர்,
B.A. (Cey) Dip in Edu SLPS Gr-I
சமூக, ஆன்மீக சேவையாளர்)

சைக்கிளுக்கே வாக்களிப்போம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)

X 11

வடமராட்சி, தென்மராட்சி கூட்டுறவாளர்கள்

(663)

## மோட்டார் சைக்கிள் திருட்டு மாணவர்கள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு அனுராதபுரம் வித்தியாலயம் ஒன்றிற்கு சென்ற கல்லூரி அதிபர் ஒருவரது மோட்டார் சைக்கிளைத் திருடியதாக கூறப்படும் பாட சாலை மாணவர்கள் மூவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்குரிய மூன்று சிறுவர்களும், அனுராதபுரம் நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான தர்ஷிகா விமலசிறி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போதே அவர்களை சிறுவர்கள் நன்னடத்தைப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த மாணவர்கள் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை பகுதி பகுதியாகப் பிரித்து விற்பனை செய்ய முயற்சித்த போது கைது செய்யப்பட்டனர். (ஓ-3)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வசந்தம் தொலைக்காட்சியின் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள மாட்டுவண்டி சவாரிப்போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நீர்வேலி மாட்டுவண்டிச் சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

இச்சவாரிப் போட்டியில் பங்குபற்றவுள்ள போட்டியாளர்கள் இன்று புதன்கிழமையிலிருந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணி வரை கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பதிவு செய்யாத போட்டியாளர்கள் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசுத் தொகை வழங்கப்படும் எனவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-4)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி புதுமுக மாணவர்களுக்கான அறிமுகவிழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2010 ஆம் கல்வியாண்டிற்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான அறிமுகவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முன்னாள் பணிப்பாளர் திருமதி புவனேஸ்வரி இராமகிருஸ்ணா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

## சங்கானைப் ப.நோ.கூ.ச ஊழியர் சங்கத்தின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு செயற்பாடுகள் சீரடைந்துள்ளன

(வட்டுக்கோட்டை)

சங்கானை பல.நோ. கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்க அங்கத்தவர்கள் 4 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் பணிப்பாளர் சபையினர் அவசரமாகக் கூடி ஊழியர் தொழிற்சங்கத்துக்கு அவர்களது பிரச்சினைகள் குறித்து கீழ்வரும் உறுதிமொழிகளை வழங்கியதை அடுத்து சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதன்போது இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொருட்கள் கொள்வனவு செய்து சகல கிளைகளுக்கும் வழங்கப்படும் என்றும் மாசி மாதத்திற்கான சம்பளம் இம்மாதம் இறுதிக்குள்ளும் பங்குனி மாத சம்பளம் சித்திரை 10 ஆம் திகதிக்கு முன்னரும் வழங்கப்படும் என பணிப்பாளர் சபை உறுதிமொழி வழங்கியது.

மேலும் இவ்வுறுதி மொழிகள் சரியாக செயற்படுத்தப்படாவிடின் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-4)

## சனசமூக நிலைய புனருத்தாரணம்

வாதரவத்தை பெரிய பொக்கணை கணேஸ்வரா சனசமூக நிலைய புனருத்தாரண ஆரம்ப வைபவம் இன்று புதன்கிழமை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அமரர் இந்துமதி ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினரால் மேற்கொள்ளப்படவிருக்கும் இச்சிறுவர் நல்வாழ்வு செயற்றிட்டத்தினை துர்க்கா தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும் கழக ஆலோசகர் வை.சுரேஷ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அமரர் இந்துமதி ஞாபகார்த்த நிதியத்தை சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர் லக்ஸ்மன், பொது வைத்திய நிபுணர் திருமதி. ஜெ. கணேசமூர்த்தி ஆகியோரும் மானிட விடியற்கழக ஆலோசகர்கள், உறுப்பினர்கள் கிராமமக்கள் உள்ளிட்டோர் பங்கு கொள்ளவுள்ளனர். (ஓ)

## இடம்பெயர்ந்து யாழ் வலயத்தில் கற்கும் கல்வி பொதுத்தராதர (உ/த), புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாண வலயத்திலுள்ள. பாடசாலைகளில் இணைக்கப்பட்டுக் கல்வி பயிலும் க.பொ.த. (உ/த) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிற்கான விண்ணப்பப்படிவம் நிரப்புதலும், கையொப்பமிடலும் யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இடம் பெறவுள்ளது.

க.பொ.த (உ/த) மாணவர்கள் தாம் தோற்றவுள்ள பாட இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் சமூகமளித்து விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)



வண்ணார் பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சுற்றுப் பிரகார மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவின் போது யாழ்ப்பாணம் குடியியல் நீதிமன்ற பதிவாளர் து. சுரேந்திரன் ஆலய பிரதம குருக்களிடமிருந்து அடிக்கல் நாட்டுவதற்கான வலம்புரிச் சங்கினை பெறுவதைப் படத்தில் காணலாம்.

## நிலையறி மதிப்பீட்டுப் பரீட்சை

வடக்குமாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படும் தரம் 1 தொடக்கம் 9 க்கான நிலையறி மதிப்பீட்டுப் பரீட்சை நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை தொடர்பாக வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## காசநோய் தொடர்பான தேசிய மட்ட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 110 காசநோயாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 12 பேர் இடம்பெயர்ந்த மக்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் வருடத்தில் 1 இலட்சம் பேரில் 48 பேர் காசநோயினால் பீடிக்கப்படுவதாகவும் உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கெடுப்பின்படி 1 இலட்சம் பேரில் 40 பேர் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலதிகமாகவுள்ள 8 பேர் இடம்பெயர்வுகளினால் ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் காசநோய் தொடர்பான தேசிய மட்ட விழா பதுளையில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் காசநோய் தொடர்பான நிகழ்வுகள் இதில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டி

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்கம் தொடர்பான போட்டிகள் நாளை வியாழக்கிழமையும் வாசிப்பு, பேச்சு ஆகிய போட்டிகள் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 1 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேலும் இசை, நடன போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 3.30 மணிவரை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

இராசரத்தினம் சுபாசினி, சுதந்திரபுரம் வசாவிளான் விசேட அடையாள அட்டை இலக்கம் 0907025264, துர்க்காதேவி அஜந்தன், சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். தேசிய அடையாள அட்டை இல. 837714826V, ஆகிய இருவரின் அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## யாழ். செய்திகள்

## யாழ். கல்வி வலய மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களில் கண்பார்வை குறைவுடைய மாணவர்களுக்கு கடவுளின் சொந்தக் குழந்தைகள் (God's own children) நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இலவச கண்சிகிச்சை முகாமில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## பொதுக்கூட்டம்

(அல்வாய்)

சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கத்தின் 22 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் யூலை மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சங்கத்தலைவர் செ. விக்னேஸ்வரன் தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் யூன் மாதம் 27 ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சங்கப் பணிமனையில் சமர்ப்பிக்கலாம் என சங்கச் செயலாளர் கு. பிரபாகர் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் இ. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள சகல திணைக்கள தலைவர்களையும் சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

# மக்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன

## இராணுவப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கு தமிழ்மக்களை இராணுவ ரீதியில் அடக்கு முறைக்கு உட்படுத்தும் நோக்கில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவ முகாம்கள் குறித்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை. யுத்தம் ஆரம்பமான காலம் முதல் இராணுவமுகாம்கள் காணப்படுகின்றன. இடம்பெயர் மக்கள் உள்ளிட்ட சகலரையும் பாதுகாக்கும் நோக்கிலேயே இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.


யுத்த வலயத்தில் சுமார் 147 இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதாக அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால் கிளிநொச்சி , மாங்குளம், முல்லைத்தீவு, கொக்காவில் போன்ற பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. பாதுகாப்பு காரணங்களினால் எத்தனை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன என்பது குறித்த தகவலை வெளியிட முடியாது: உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய சக்திகளிட மிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே இவ்வாறு முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு கருதி இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# நடைபெறவுள்ள தேர்தல் நாட்டுக்கும் உலகிற்கும் முக்கிய செய்தியைக் கூறும் -பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)



எதிர்வரும் பொதுத்தேர்தலில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கிய செய்தியைக் கூறும் தேர்தலாகும் என பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

புத்தளம் நகரில் நடைபெற்ற ஐ.ம.சு.மு. தேர்தல் பிரசார கூட்டத்திலே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் துரித அபிவிருத்திப் பயணத்தை தடுத்து நிறுத்தி நாட்டைக் காட்டிக் கொடுக்கும் சூழ்ச்சிகளில் ஈடுபடும் தேசிய சர்வதேச சக்திகளை இல்லாது ஒழிப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தை நாட்டு மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்.

பலமான பாராளுமன்றம் இல்லாவிட்டால் நிறைவேற்று ஜனாதிபதி முறையும் பயனற்றதாகும். முக்கியமான சட்ட மூலங்களை நிறைவேற்றவும் பாரிய மாற்றங்களை நாட் டில் ஏற்படுத்தவும் மூன்றில் இரண்டு பெரும் பான்மையைக்கொண்ட பாராளு மன்றப் பலத்தை அரசாங்கத்துக்கு பெற்றுத் தர வேண்டும்.

சுயாதீன அமைப்புக்கள் அரசாங்கத் திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றன. கடந்த மாதங்களில் கோடிக்கான டொலர்கள் வந்து சேர்ந்துள்ளன. இவை எதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்ற வகையில் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. இதை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இதில் தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் தொடர்பு படுகின்றன.

நாட்டை காட்டிக்கொடுப்பதிலும் நாட்டில் மனித உரிமை மீறல் இடம்பெறுவதாகக் கூறி மோசமான பிரசாரங்களில் ஈடுபடுவதிலும் இச்சக்திகள் முனைப்பாக செயற்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த போதிய பலத்தை பெற்றுத்தரும் வகையில் பொதுத்தேர்தல் வெற்றி அமைவது அவசியம். உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டின் பலமான சக்திகள் தலையிடக்கூடாது என வியன்னா தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. எமதுபிரச்சி னைகளை தீர்த்துக்கொள்வதற்கான பலமும் உரிமையும் போதியளவு எமக்குண்டு.

எமது விவகாரங்களில் தலையிட வேண்டாம் என நாம் வெளிநாடுகளைக் கேட்டுக் கொள்கின்றோம். சில ஐரோப்பிய நாடுகள் இன்னும் கூட இலங்கையை ஒரு அடிமை நாடாகவே நடத்தப் பார்க்கின்றன. இலங்கை தனித்துவமும் , கௌரவமும், உரிமையும் உள்ள நாடு. சிறிய நாடாக இருப்பினும் கலா சாரம் மற்றும் ஒழுக்கங்களில் சிறந்து விளங் கும் நாடு.

முழுமையான உரிமை கொண்ட எமது நாட்டில் நாம் எவ்வாறு ஆட்சி செய்வது என் பதை ஐரோப்பிய நாடுகள் எமக்குச் சொல்லித் தரவேண்டிய அவசியம் கிடையாது. நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருவது தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தற்போதுள்ள அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவந்து தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டு வருவதே எமது நோக்கம் என்றார். (2-4)




# நான்கு வருடத்தில் 35 ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது-சுசில் பிரேமஜெயந்த

(கொழும்பு)

கடந்த நான்கு வருட காலத்தில் 35 ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் கல்வித்துறையில் அரசியல் செல்வாக்குச் செலுத்துவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் கல்வித்துறை மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை.

புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல், ஆசிரியர்கள் , அதிபர்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், கல்வி நிர்வாகச் சேவைக்கு ஆட்சேர்ப்பு, நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், ஆங்கில அறிவை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பாடநூல்கள் விநியோகம், சீருடை விநியோகம் என்பவையும் ஒழுங்கு முறைப்படி நடைபெற்று வருகின்றன என்றார். (2-4)

# தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்த வேட்பாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்

## பிரதி பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த வேட்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பிரதிக் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறிய 158 பேர் தலைமறைவாகியுள்ளதாகவும் குறித்த சந்தேகநபர்களை கைது செய்ய வேட்பாளர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததெனவும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட 78 பேரை ஏற்கனவே பொலிஸார் கைது செய்யதுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

எனவே தேர்தல் வன்முறைகளில் ஈடுபடக் கூடாது என்பதனை கட்சி உயர்பீடம் தமது ஆதரவாளர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

# நாடாளுமன்றத் தேர்தல் 2010 யாழ். மாவட்டம்



அன்பார்ந்த தீவக கடற்றொழிலாளர்களே!

மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், கடற்றொழிலாளர் சமூகம் கடந்த காலங்களில் பட்ட கஸ்ரங்கள், துன்பங்களில் பங்கு கொண்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தினார். வலுவிழந்தவர்கள், விதவைகள் ஆகியோரின் குடும்ப நிலைகளைக் கேட்டறிந்தும் நேரில் பார்த்தும் அவர்களுக்கான உதவிகளை உடனடியாகச் செய்தார். கடற்றொழில் தடை செய்யப்பட்ட காலங்களில் தீவக தொழிலாளர்கள் பட்ட கஸ்ர நிலை கண்டு எமது அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு தொழிற் தடைகளை நீக்கிச் சுதந்திரமாக இரவு பகல் நேரங்களில் தொழில் செய்து கரை திரும்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.


எமது கடல் உற்பத்திப் பொருட்களைத் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்குப் பல வழிகளிலும் உதவிக் கரம் நீட்டினார்.

எமது சமூகத்திற்கு அனைத்து அமைச்சுக்களுடனும் தொடர்பு கொண்டு தொழிலை மேம்படுத்திய எமது அமைச்சர் அவர்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று மக்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரவ அமைச்சர்

## கே.என். டக்ளஸ் தேவானந்தா

X 9



**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்**
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய அமைப்பாளர்

3




**அலெக்ஸாண்டர் சூசைமுத்து**
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய அமைப்பாளர்

4



**கந்தசாமி கமலேந்திரன்**
(தோழர் கமல்)
தீவக வலய அமைப்பாளர்

6



**சந்திரகுமார் முருகேசு**
(தோழர் அசோக்)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

8




**பசுபதி சீவரட்ணம்**
(தோழர் கி.பி. ஜீவா)
தேசிய அமைப்பாளர்

10



**முருகுப்பிள்ளை சிறீபதி**
முன்னாள் ஹாட்லிக் கல்லூரி அதிபர்

11



**சில்வேஸ்த்திரி அலென்ரின்**
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட அமைப்பாளர்

12

**தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரைவுள்ளது)**

(க-4748)









சாவகச்சேரியில் அமைக்கப்படவுள்ள நீதிமன்றத்தின் புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதம நீதியரசர் அசோக டி.சில்வாவிற்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி தி.யோ.பிரபாகரன் மாலை அணிவிப்பதையும் ஏனைய விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும் பிரதம நீதியரசர் அடிக்கல் நாட்டி வைப்பதையும் , உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-சாவகச்சேரி நிருபர்).

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் கடந்த வருடம் வருமானம் அதிகரிப்பு

## ஆண்களே அதிகம் சென்றுள்ளனர்

கடந்த வருடம் வெளிநாட்டு வேலை வாய்ப்பால் வருமானம் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது.

அதன் படி கடந்த 2008 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் 500பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது. முன்னைய இதே காலப்பகுதியின் ஊடாக ஒப்பிடும் போது 50 பில்லியன் ரூபாவால் வருமானம் அதிகரித்துள்ளதாக பணிய கத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் தொழில் திறமையுடன் கூடிய ஆண்கள் அதிக அளவில் வெளிநாடு சென்றதன் காரணமாகவே இந்த வருமான அதிகரிப்பு கிடைத்ததாகவும் அவர் மேலும் கூறினார். (2-4)

# பளை மத்திய கல்லூரியை புனரமைக்க நடவடிக்கை

பளைப்பகுதி இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றது. பளைப்பகுதிக்கான தபால் சேவையும் இடம்பெறத்தொடங்கியுள்ளது.

இதேவேளை பளை மத்திய கல்லூரியை மீளப் புனரமைத்து அப்பகுதியின் கல்வி நிலையை மேம்படுத்தவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. (ஓ-43)

# புனர்வாழ்வளிக்கப்படும் உறவினர்களை யாழ். முகாம்களிலுள்ளோர் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

படையினரிடம் சரணடைந்து தற்போது \ ் ,சேனபுர, இரத்மலானை மற் றும் பூசா முகாம்களில் புனர் வாழ் வளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்ப மொன்று கொடிகாமம் மற்றும் இராமாவில் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் அவர்களின் உறவினர்கள் 23 பேருக்கு அளிக்கப்பட்டதாக யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம். ஹத்துருசிங்கவின் ஆலோசனையில் 52 ஆவது படையணி தளபதியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இச் சந்திப்பில் இதற்கான பயண ஒழுங்குகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் கடந்த 17ஆம் திகதியிலிருந்து 3 நாள் பயணத்தை மேற்கொண்டு தென்பகுதியில் இருந்த வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# ஏழாலை ஸ்ரீமுருகன் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 17வயது பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடம்பெற்று சம்பியனானது. (ஓ)

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல்-2010

கடந்த 30 ஆண்டு கால உரிமைப் போராட்டத்தின் முடிவில் தமிழினம் மீணடும் 1948 ஆம் ஆண்டு கால நிலைக்குத் தள்ளப் பட்டுள் ளமை ஒவ்வொரு தமிழனினதும் நெஞ்சிலிருந்து உதிரம் கொட்டும் பரிதாப நிலை யாகும். 150 ஆண்டு கால ஆட்சியின் பின் 1948 இல் ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறியபோது தமிழ் தலைவர்களின் தமிழ் உரிமை தொடர்பான கோரிக்கைகளை புறந் தள்ளி தமிழ் மக்களை அரசியல் அநா தைகளாக விட்டுச்சென்றனர். மீண்டும் அதே நிலைக்கு தமிழினம் இன்று தள்ளப்பட்டுள் ளமை காலத்தின் கொடுமை. இன்றைய அர சியல் சூழ்நிலையில் 60 ஆண்டு கால அரசி யல் சூறாவளிகளில் சிக்கி ,அல்லல்பட்டு, அனு பவம் பெற்றுள்ள தமிழினம் தெளிந்த சிந்த னையுடன் தீர்மானம் எடுத்து செயற்பட வேண் டிய கட்டாய நிலையில் இருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுத்தரும் என நம்பிய மக்கள் இக்கருத்தை ஆதரித்து நின்ற சந்தர்ப்பவாத தலைவர்களை நம்பி ஆதரித்தனர். இன்னும் பலர் அச்சம் காரணமாக மௌனித்திருந்தனர்.

பிழையான சிந்தனைகளும் அதனடிப் படையில் எடுக்கப்படும் முடிவுகளும் பிழையான அரசியல் தலைமையைத் தேர்ந் தெடுக்கும் அவல நிலைக்கு தள்ளிவிடும் என்பது உறுதி. இன்று எந்த அளவுகோலை கொண்டு மதிப்பிட்டாலும் தந்தை செல்வநாயகம் அவர்களின் ஒரே அரசியல் வாரிசு திரு.வீ. ஆனந்த சங்கரி அவர்கள்தான் என உறுதிபடக் கூற முடியும். இது வெறும் வாதத்திற்கான கூற்று அல்ல. தெளிந்த வலுவான காரணங்களின் அடிப்படையில் இக்கருத்தினை தமிழ் மக்களின் சிந்தனைக்காக முன் வைக்கின்றோம்.

1. தந்தை செல்வாவின் சமஷ்டிக் கொள்கையும் ஆனந்தசங்கரி அவர்களும்:- பிரித் தானியர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை பெரும்பான்மை இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்ற பின் திட்டமிட்ட நகர்வுகளால் தமிழினத்தை தமிழ் பிரதேசங்களிலேயே சிறு பான்மையினராக மாற்றி அரசியல் உரிமைகளற்ற இரண்டாம் தரப் பிரஜைகளாக்கவும் முயற்சிப்பதை திட்டவட்டமாக விளங்கிக் கொண்ட தந்தை செல்வா அவர்கள் , இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்றுவித்து, தமிழர் உரிமைகளை மீண்டும்வென்றெடுக்க தீர்க்கமான கொள்கைகளை வகுத்து செயற்பட்டார். அவரது அரசியல் செயற்பாடுகள் இரண்டு ஆதாரக் கொள்கைகளை கொண்டி ருந்தன.

அ . சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் தமிழினம் சுய நிர்ணய உரிமைகளுடன் தம் மைத் தாமே ஆளும் உரிமையை வென் றெடுத்தல்.

ஆ . தமிழர் உரிமைகளை வென்றெடுக்க தொடர் போராட்டங்களை திட்டமிட்டு காந்தீய நெறிப்படி, அஹிம்சை வழியில் மேற்கொள்ளுதல்.

தந்தை செல்வாவின் அரசியல் தொழிற்பாட்டில் உயிர்நாடிகளான மேற்கூறிய இரு கொள்கைகளையும் இன்றுவரை அட்சரம் தவறாது கடைப்பிடித்து நிற்பவர் திரு. ஆனந்த சங்கரி அவர்களே என்பது மறைக்க முடியாத உண்மை.

சமஷ்டிக் கொள்கைகளை அரசியல் மேடைகளிலும் பாராளுமன்றத்திலும் சர்வதேச உயர் ஸ்தானிகர்களின் மத்தியிலும் அச்சமின்றி ஓங்கி ஒலிக்கச் செய்து வருபவர் திரு.வீ. ஆனந்த சங்கரி அவர்களே. விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களுக்கு என வாஞ்சையுடன் விழித்து எழுதிய 9 கடிதங் களிலும் இன்றைய அரசியல் சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் ஆட்சி உரிமையைப் பெற சமஷ்டி தீர்வினை ஏற்றுக் கொள்ளும்படியும் தொடர்ந்து இடம் பெறக் கூடிய பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் முன்னெடுத்துச் செல்ல முடியுமெனவும் அந்த முயற்சிகளுக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்கள் வலியுறுத்திக் கொண்டமை அரசியல் யதார்த்த நிலையை நன்கு புரிந்து கொண்டு இருக்கும் தலைவன் என்பதையும் தந்தை செல்வாவின் சமஷ்டிக் கொள்கையை தொடர்ந் தும் கடைப்பிடிப்பவர் என்பதையும் வெளிப் படுத்துகின்றது.

2 . தந்தை செல்வாவின் அஹிம்சைக் கொள்கையும் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களும்.

தந்தை செல்வா காட்டிய அஹிம்சைப் பாதையில் இன்றும் பிசகின்றிப் பீடு நடை போடும் தலைவன் திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்களே. ஆயுதப் போராட்டம் அழிவைத் தரும் என்றும் தந்தை செல்வா அவர்கள் காட் டிய அஹிம்சை வழிப் போராட்டம் சிறு பான் மையினரான தமிழினத்துக்கு ஏற்ற போராட்ட வழி எனவும் உரத்த குரலில் ஒலித்துக்கொண் டிருக்கும் தலைவன் திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்களே.

ஆயுதப் போராட்டம் தமிழனத்தின் கல்வி , கலாசார , பண்பாட்டுச் சின்னங்களைச் சிதை த்து , பொருளாதாரக் கட்டமைப்பை அழித்து தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப் படுவதற்கும் வழி வகுக்குமென பரிபூரணமாக நம்பினார். இந்த நிலை காரணமாகவே அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்(படுத்த) பட்டுள்ளது என உளவுத் துறையும் அவர்மீது நல்லெண்ணம் கொண்ட பெரியவர்களும் , நண்பர்களும் எச்சரித்து அறிவுறுத்திய போதும் அஞ்சி ஒதுங்கினார் இல்லை. இத்தகைய நெருக் கடிகளுக்கு மத்தியிலும் தந்தை செல்வா அவர்களின் அஹிம்சைக் கொள்கையை முன் நிலைப்படுத்தி எழுதியும் பேசியும் பிரசாரம் செய்தமையைப் பாராட்டி ஐக்கிய நாடுகள் சபை *மதன்ஜீத்சிங்* சமாதானப் பரிசினை வழங்கிக் கௌரவித்தமை தந்தை செல்வா அவர்களின் அஹிம்சைவழிக் கொள்கைக்கு அவர் தேடித் தந்த பெருமையான அங்கீகாரம் எனவும் கொள்ள முடியும்.

அன்பார்ந்த தமிழ் மக்களே! அரசியல் அரங்கில் தவித்து நிற்கும் நாம்மூத்ததலைமையை போற்றி, தமிழினத்தின் விடிவிற்காக அவர் கள் வகுத்துத் தந்த கொள்கைகளை உயிரை பணயம் வைத்து காத்து நடைமுறைப்படுத்தக் கூடிய வைரநெஞ்சம் கொண்ட நீண்ட அரசியல் அனுபவமும் சோர்விலா ஆற்ற லும் தமிழனத்தின் மேன்மையன்றி வேறு சுயநல நோக்கில்லாத , எந்த அரங்கிலும் எந்ந நேரத்திலும் வாதாடக்கூடிய ஆற்றல் மிக்க தலைவன் திரு.வீ.ஆனந்தசங்கரி என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் உறுதிப் படுத்துகின்றன. இத்தலைமையை தமிழினமும் ஏனைய அரசியல் கட்சிகளும் ஏகோ பித்து ஏற்றுக் கொள்வதால் தமிழ்மானம் பேணப்படும். சுய நலம் அற்ற உழைப்பு கிட்டும். அற்ப சலுகைகளுக்காக மாற்றானிடம் மண்டியிடும் அவநிலை ஏற்படாது. வெற்றியிலும் தோல்வியிலும் மக் கள் பக்கம் நின்று உழைத்திடும் மனப்பக்குவம் கொண்ட தலைமை கிடைக்கும். அன்பார்ந்த தமிழ் மக்களே! சிந்தித்து செயற்படுங்கள்.

**ப.கந்தையா**



## வீ. ஆனந்தசங்கரி
## தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி

(சி-4747)

# சிறுபான்மை இன மக்கள் அனைவரும் அரசியலில் ஓரணியில் நிற்க வேண்டும்

## இ.தொ.கா. வேட்பாளர் செந்தில்

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒரே மொழி பேசும் சிறுபான்மை இன மக்கள் என்ற அடிப்படையில் அரசியலில் ஓரணியில் நிற்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடும் இ.தொ.கா. வேட்பாளரான செந்தில் சிவஞானம் தெரிவித்தார்.

ஐ.ம.சு. கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சிறுபான்மை இன வேட்பாளர்களான மாநகர முதல்வர் ஹில்மி மொஹமட் கரீம், செந்தில் சிவஞானம் ஆகியோருக்கு ஆதரவு திரட்டுமுகமாக இ.தொ.கா. அமைப்பாளரும் மாநகரசபை உறுப்பினருமான எம். சிவஞானத்தால் மாத்தளை புரூடி வீதியில் சனிக்கிழமை காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசிய போது,

மாநகரசபை மற்றும் பிரதேசசபைகளுக்கு அப்பால் மாகாணசபையில் இருந்து வந்த சிறுபான்மை இனப் பிரதிநிதித்துவம் அண்மைக் காலத்தில் இழக்கப்பட்டு விட்டது.

இது தவிர பாராளுமன்றத்தில் மாத்தளைப் பகுதி சிறுபான்மை இனத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு எட்டாக்கனியாகவே இருந்து வந்துள்ளது. இந்த நிலையை உடைத்தெறிவதற்குரிய சரியான வாய்ப்பாக பொதுத் தேர்தல் வருகிறது.

மாத்தளை மாவட்டத்திலுள்ள சுமார் 68 ஆயிரம் சிறுபான்மை இன மக்களும் தமது விருப்பு வாக்குகளில் ஒவ்வொன்றை சிறுபான்மை வேட்பாளர்களுக்கு அளித்தால் நிச்சயமாக இருவர் இல்லாவிட்டாலும் நிச்சயமாக ஒருவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்ப முடியும்.

இதனை தமிழ், முஸ்லிம் இரு பகுதியினரும் தமது பாரிய கடமையாகக் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் மூலம் நமது வாக்குப் பலம் வெளிப்படுத்தப்படும்.

எதிர்காலத்தில் தேர்தல் தொகுதி மற்றும் தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் சிறுபான்மை மக்களுக்கான பிரதிநிதித்துவம் வலுப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை

## ஆசிரியர் விடுதலை முன்னணி செயலாளர்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்கு உரிமையும் சுதந்திரமும் இருக்கின்றது. இவற்றை மறுப்பதற்கோ கட்டுப்படுத்துவதற்கோ யாருக்கும் உரிமை கிடையாது என்று ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் எஸ். தேவசிகாமணி தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சமூகம் இந்த நாட்டிலுள்ள சக்தி மிக்கதொரு சமூகமாகும். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் உரிமையுள்ளவர்கள்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கும் உண்டு.

இதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்கும் வகையில் ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# பளை பகுதி தென்னந்தோட்டங்களுக்கு பெருந்தோட்ட அமைச்சர் விஜயம்

## தோட்டங்களைப் பொறுப்பேற்க நோக்கம்

பளை பகுதியில் இயக்கச்சி, தர்மங்கேணி பகுதிகளில் பெருந்தோட்ட அமைச்சர் டி.எம்.ஜயரட்ன உலா வருகின்றார். அங்கு இருக்கின்ற தென்னந்தோட்டங்களை பார்வையிட்ட அமைச்சர் அவற்றை அரசாங்க தெங்கு பயிர்செய்கை திணைக்களத்திடம் பொறுப்பு கொடுக்க உள்ளராம்.

தெங்கு அபிவிருத்தி என்ற பெயரில் இந்த தோட்டங்கள் பொறுப்பெடுக்கப்படுகின்றன. பச்சிளைப் பள்ளிப் பகுதியில் பெரும்பாலான தோட் டங்கள் தனியார்களுடையது சில தோட்டங்களே தெங்கு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# இடம்பெயர்ந்து வாழ்வோரில் 45,967 பேர் பொதுத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்களில் 45ஆயிரத்து 967 பேர் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 50 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்த போதிலும் அதில் 4 ஆயிரத்து 33 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 111 பேரும், கம்பஹாவில் 567 பேரும், களுத்துறையில் 150 பேரும், யாழ்ப்பாணத்தில் 408 பேரும், வன்னியில் 15 ஆயிரத்து 817 பேரும், மட்டக்களப்பில் 09 பேரும், புத்தளத்தில் 26 ஆயிரத்து 582 பேரும், அனுராதபுரம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 48 பேரும் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளோரின் விபரங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனால் விண்ணப்பித்த இடம்பெயர்ந்தோர், தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம் என்றும் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ-4)

# ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஆட்சி நடத்த விருப்பம் – கயந்த

(கொழும்பு)

ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் ஆட்சி நடத்துவதில் எவ்வித பிரச்சினைகளும் கிடையாதென ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட வேட்பாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது,

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி மூலம் நாடு சுபீட்சமான நிலையை எட்டும். இதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டுமே நன்மையடையும்.

இவ்வாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி அதிகாரம் ஒரு கட்சியிடமும், பாராளுமன்ற ஆட்சியதிகாரம் மற்றுமொரு கட்சியிடமும் காணப்படுவது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிகோலும் என்றார்.

குறிப்பாக ஜனநாயக விரோத செயல்களில் எந்தத் தரப்பினர் ஈடுபட்டால் மற்றைய தரப்பு அதனை தடுத்து நிறுத்தும் முனைப்புகளில் ஈடுபடும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தர்ப்பூசணி/வத்தகைப்பழம்

Botanical Name- Citrullus Vulgaris
Family - Cucurbitaceae
Engl - Water melon
Sinh - komadu

இதன் பிறப்பிடம் ஆபிரிக்கா ஆகும். தரையோடு படர்ந்த கொடி ஓராண்டு வாழக்கூடியதாகும். தடித்த கிளைகளைக் கொண்டது. சுணைகளையுடையது. இலைகள் 7.5-20 செ.மீ நீளமும் ஆழமாக பிளவுபட்டும் சோணைகளாகக் காணப்படும். 25 செ.மீ. விட்டமுடைய கனிகள் காணப்படும் வளவளப்பாகவும் வெளிப்புறம் பச்சை நிறமாகவும் காணப்படும். உள்சதைப்பகுதி சதைப்பிடிப்பான சாறுடையதாக காணப்படும் (Flesh juicy). விதைகள் பல காணப்படும்.

### இனவிருத்தியும் பரம்பலும்

மணற்பாங்கான பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன் வயது 120 நாட்கள் ஆகும். அறுவடை சமயத்தில் பழங்கள் சரியான முதிர்ச்சியாகியிருத்தல் வேண்டும். பழத்தை புறங்கையால் தட்டிப் பார்க்கும் போது ஒருவிதமான உலோகச்சத்தம் (Metal sound)கேட்டால் அப்பழம் முதிர்ச்சியடையவில்லை என்பதைக் குறிக்கும். அப்படியின்றி ஒரு விதமான கனமான மந்தமான சத்தம் கேட்டால் அப்பழம் நன்கு பழுத்துவிட்டதைக் குறிக்கும்.

தண்டு நுனியிலுள்ள படர்கம்பிகள் (Tendrills) சகா ஆரம்பிக்கும் போது பழங்கள் முதிர்ச்சியடைந்ததைக் குறிக்கும்.

**100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்:**


| | தர்ப்பூசணி வத்தகைப்பழம் | தர்ப்பூசணி (இனிப்பு) (வத்தகைப்பழம்) |
|---|---|---|
| ஈரலிப்பு | 95.8கி | 95.2கி |
| புரதம் | 0.2கி | 0.3கி |
| கொழும்பு | 0.2கி | 0.2கி |
| காபோவைதரேற்று | 3.3கி | 3.5கி |
| கல்சியம் | 11மி.கி | 32மி.கி |
| பொஸ்பரஸ் | 12 மி.கி | 14மி.கி |
| β கரோட்டின் | -- | 169(மை.கிராம்) |
| தயமின் | 20 (மை.கி) | 110 (மை.கி) |
| ரைபோபிளேவின் | 40 (மை.கி) | 80(மை.கி) |
| விற்றமின் C | 1.0(மி.கி) | 26(மி.கி) |
| நார் | 0.2(கி) | 0.4(கி) |

### மருத்துவப் பயன்கள்:

◆ பழம், விதை மருந்துக்கு பயன்படுகின்றன.

◆ இதன் பழம் இனிப்பாக இருக்கும். உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். வெப்பகாலத்திற்கு உகந்த ஆரோக்கிய பழமும் பானமுமாகும். கோடை காலத்தாகத்தை தணிக்கும்.

◆ வயிற்றுபோக்கு, வயிற்றுகடுப்பிற்கு இப்பழச்சாறு ஒரு டம்ளருடன் எலுமிச்சம் பழச்சாறு ஒரு டம்ளர் கலந்து கொடுத்தால் நல்ல பயனைக் கொடுக்கும்.



◆ வெள்ளை சாய்தல் நோயினால் பாதிக்கப்பட்டு சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் உண்டாவதைத் தடுக்க இப் பழரசத்துடன் மோர், உப்பு கலந்து அருந்துதல் வேண்டும்.

◆ காலையில் இப்பழம் சாப்பிட்டுவர இரைப்பையை பலப்படுத்தி உணவை நன்கு செரிக்கச் செய்யும்.

◆ தர்ப்பூசணிச்சாறு 30 மில்லி, ஒரு தேக்கரண்டி சுத்தமான தேன், 2 தேக்கரண்டி எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றை கலக்கி தினமும் 40 நாட்கள் காலையில் அருந்திவர இரத்தம் சுத்தி அடையும் உடலில் ஏற்படும் சொறி, சிரங்கு, அரிப்பு மற்றும் கண்சிவத்தல் ஆகியவை தீரும். விந்து விருத்தியையும் உண்டாக்கும். சிறுநீரையும் பெருக்கும்.

◆ காயாக இருக்கும் போது இதனை கறிசமைத்து உண்ணலாம். நல்ல சீரண சக்தியை ஏற்படுத்தும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

◆ இதன் விதைகளை சேகரித்து பொரித்து 2 கிராம் அளவு 100 மில்லி பசுவின் பாலில் கலந்து அருந்த உடலுக்கு உறுதியைத் தரும்.

# கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புகள்

# தவிர்க்கமுடியாத தலைவிதியால் தவறிப்போனது

## பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் தேர்தல் விஞ்ஞாபனம்

***எமது அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!***

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ் மக்கள் பட்ட துன்பங்களுக்கும் இழப்புக்களுக்கும் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் நாம் விடிவுகாண வேண்டும். அதனை நாம் அடைய வேண்டுமானால்,

- எமது மாகாணங்களுக்கு சுயநிர்ணய அதிகாரங்கள் கொண்ட அரசியல் தீர்வு வேண்டும்,
- நம் மத்தியில் உண்மையான ஜனநாயகச் சூழல் நிலவ வேண்டும்,
- எமது பிரதேசங்களில் விரைவான பொருளாதார அபிவிருத்திகள் நடைபெற வேண்டும்.

இந்த நாட்டில் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக எமக்கு இனரீதியான பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அவசியத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினர்கள் என்பதால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அடிப்படை உரிமைகள் ரீதியாகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்த சொல்லொணாத் துன்பங்களாலும் இழப்புக்களாலும் மிகவும் வாழ்வில் நொந்து போயிருக்கிறார்கள் - விரக்தியின் எல்லைகளுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல வாழ்க்கை மீளமைய வேண்டும். அந்த வாழ்க்கைக்கு அடிப்படையான சிறந்த இல்லம் வேண்டும். வேண்டிய உடைகள் வேண்டும். சுகாதாரமான சூழல் வேண்டும். வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு உரிய தொழில் வேண்டும். பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வேண்டும். இலங்கையில் எங்கும் செல்ல இலகுவான போக்குவரத்தும் மற்றும் சர்வதேச தொடர்பு வசதிகளும் வேண்டும்.




இந்த அடிப்படைத் தேவைகளை நாம் அடைவதற்கு மனித உரிமைகள் மதிக்கப்படும் சுதந்திரமான சூழல் வேண்டும். ஜனநாயக அரசியல் பேணப்பட வேண்டும். இனம், சாதி, மத பேதங்களற்ற சமாதானமும் சமத்துவமும் காக்கப்பட வேண்டும்.

**இவை கிட்ட வேண்டுமாயின் :-**

- தமிழ் மக்கள் தமது பகுதிகளில் தமது அலுவல்களை தாமே பார்த்துக் கொள்வதற்கு உரிய வகையில் நிலம், கல்வி, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்திகள், பொலிஸ் விடயங்கள், நகர விருத்திகள், கிராம முன்னேற்றங்கள் போன்ற விடயங்களில் சுயநிர்ணய உரிமைகள் கொண்டிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.
- இலங்கையின் மத்திய அரசாங்க முறைமையில் தமிழர்களும் உரிய பங்காளர்களாக ஆக்கப்பட வேண்டும்.
- இனவாதங்கள், மதவாதங்கள் அற்ற ரீதியில் இலங்கையில் கல்வியும், அரசாங்க உத்தியோகங்களும் வழங்கப்பட வேண்டும்.
- தமிழர்களின் பகுதிகளில் சிங்களவர்களை திட்டமிட்டுக் குடியேற்றி தமிழர்களின் பொருளாதார வாழ்வை அச்சுறுத்தும் நிலை இல்லாதொழிய வேண்டும்.
- இலங்கையின் அரச படைகள், சிங்களப் படைகள் என்ற நிலை மாறி அனைத்து இனத்தவர்களையும் உரிய அளவு கொண்ட உண்மையான தேசியப்படைகளாக ஆக்கப்படுதல் வேண்டும்.

1988 இல் வடக்கு , கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு அரசியல் அதிகார பகிர்வு முறையை நடைமுறை சாத்தியமாக்கியவர்கள் நாங்கள். குறுகிய காலமாக இருப்பினும் அதுவொரு நம்பிக்கை தரக்கூடிய வெற்றிகரமான முயற்சியாக நாங்கள் முன்னெடுத்தோம்.

சிறந்த கல்விமானும் புத்திசாதுரியமும் தீர்க்கதரிசனமும் மிக்க தோழர் அ. வரதராஜபெருமாள் அவர்கள் இணைந்த வடக்கு, கிழக்கின் முதல்வராக இருந்தார் என்பது மக்களே உங்களில் பலருக்கும் தெரிந்த விடயம். அந்த மாகாண அரச முறைமை சீர்குலைக்கப்படாது இருந்திருந்தால் தமிழர்களின் சக்திகள் ஒற்றுமையாக அதனை அன்று செயற்படுத்தியிருந்தால் இன்று இந்த நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப்பாருங்கள்.

20 வருடங்களுக்கு முன்னரே இழப்புக்களை, அழிவுகளை தவிர்த்திருக்கலாமே. தமிழர்களின் ஒற்றுமை, தமிழக மக்களின் அரவணைப்பு, இந்தியாவின் ஆதரவு, சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நின்றிருக்கலாம்.

கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புக்கள் அனைத்தும் தமிழ்ச் சமூகத்தின் தவிர்க்க முடியாத தலைவிதியால் தவறிப் போய்விட்டன. எனினும் இனியாவது எதிர்காலத்தைக் குறித்து தமிழர்கள் அனைவரும் உறுதியான தீர்மானங்களை நிதானமாகவும் சரியாகவும் மேற்கொள்ளல் வேண்டும்.

**அந்தத் தீர்மானங்கள்**

- வாக்கில் உண்மையும் நடத்தையில் நேர்மையும் அரசியலில் வல்லமையும் கொண்டவர்களையே தமிழர்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும்.
- தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக வன்முறையற்ற பாதைகளில் மக்களை நேரடிப் பங்காளர்களாக அணி திரட்டிப் போராடக் கூடியவர்களையே தலைவர்களாகக் கொள்ள வேண்டும். தமிழர்கள் மத்தியில் இருந்து மீண்டும் சுயநலமற்ற, சுயதியாகங்கள் செய்யும் தலைவர்கள் உருவாக, தமிழர்கள் அங்கீகாரம் வழங்குதல் வேண்டும்.
- கடந்த தேர்தலில் பணம் பதவி சுகபோகங்களுக்காக ஆசை கொண்ட ஒரு சுயநலக் கூட்டத்தினரை புலிகள் பாராளுமன்றம் அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர்களோ சிங்கத் தலைவர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் தமிழ் மக்களின் எந்த நம்பிக்கைக்கும் உரியவர்களாக நடந்து கொள்ளவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து நின்று ஆளுக்காள் பாராளுமன்றப் பதவிக்காக குடுமிப்பிடி சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களா தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவார்கள்? இவர்கள் தமிழர்கள் மத்தியில் வீராவேசமாகப் பேசுவார்கள்.

அளவற்ற ஆசை வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். ஆனால் தேர்தல் முடிந்ததும் கொழும்புக்கும், ஐரோப்பாவுக்கும், வட அமெரிக்காவுக்கும் சென்று தமிழர்களின் உரிமைகளை மறந்து விடுவார்கள் அல்லது விற்று விடுவார்கள். இப்படிப்பட்டவர்களை தமிழர்கள் தெரிவு செய்யமாட்டார்கள் என்னும் நிலையை இனியாவது ஏற்படுத்த வேண்டும்.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரான நாங்கள் :

- தமிழ் மக்கள் இந்த நாட்டில் சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ வேண்டிய ஒரு தேசிய இனம் என்பதை நிலைநாட்டுவதற்காகக் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருபவர்கள்.
- இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் சம உரிமை கொண்ட நாடு என்பதை நிலைநாட்டுவதில் உறுதியாகச் செயற்பட்டு வருபவர்கள்.
- தமிழர்கள் மத்தியில் சாதி, மத பேதங்களை இல்லாதொழிப்பதற்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் விடாது போராடி வருபவர்கள்.
- தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் அரசியற் சக்திகள் மத்தியில் உண்மையான ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக நேர்மையாக உழைத்து வருபவர்கள்.

இவ்வாறான எமது கட்சியின் வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை எமது கட்சியின் தேர்தற் சின்னமான சுடரும் மெழுகுதிரிக்கு நேரே புள்ளடியிட்டு அவர்களை நீங்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே எமது கட்சியின் உயரிய இலட்சியம். தமிழ் மக்களின் உடனடித் தேவைகளையும் நீண்டகாலக் கனவுகளையும் நடைமுறையாக்க நாம் உரிய உபாயங்களை முன்னெடுப்போம். அந்த வகையில் :

- நாம் தமிழ் மக்களின் தேசிய அரசியல் உரிமைகளுக்காகத் தொடர்ந்து மக்களை அணி திரட்டிப் போராடுவோம்.
- தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக சிங்கள ஜனநாய முற்போக்கு சக்திகளின் ஆதரவைத் திரட்டு வோம்.



- த மி ழ ர் க ளி ன் அபிலாஷைகளை நிலைநாட்டுவதற்கு தமிழக மக்களின் உண்மையான ஆதரவையும் இந்திய அரசின் சரியான அனுசரணையையும் மீண்டும் உறுதிப்படுத்துவோம்.
- தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்கு ஆதரவாக சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைத் திரட்டுவோம்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் வாழ்வாதாரங்கள் மறு நிர்மாணம் செய்யப்படவும், வீடுகள், வீதிகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள், நீர்ப்பாசனக் குளங்கள், துறைமுகங்கள் என அனைத்தும் செப்பனிடப்படவும் வேண்டி அரசை உரிமையோடு வலியுறுத்துவோம்.
- எமது தேசத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்கள் மீண்டும் நவீன நுட்பங்களோடு உயிரோட்டம் பெறவும், பல் வகைப்பட்ட தொழிற் துறைகள் மற்றும் வர்த்தகத் துறைகள் செழிப்படையவும் அத்துடன் எமது கடற்கரைகள் எங்கும் சுற்றுலாத்துறை விரிவு கொள்ளவும் ஆவன செய்வோம்.
- சிறப்பு முகாம்களிலும் சிறைகளிலும் உள்ள அப்பாவி சிறுவர், சிறுமியரையும் இளைஞர், பெண்களையும் விடுவிக்க நாம் வேண்டிய கோரிக்கைகளை முன்னெடுப்போம்.

அவர்கள் பெற்றோருடனும் சுற்றத்தவர்களுடனும் வாழ்வதற்கும் கல்வி கற்பதற்கும் தொழில் செய்வதற்குமான உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

- பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் வறுமை நிலையை போக்கவும் அவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வோம்.
- வடக்கு வலிகாமம் மக்கள் கடந்த 20 வருடங்களாக அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெருந்தொகை குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்கள் இராணுவ பாதுகாப்பு வலயங்களாக இன்னமும் உள்ளன. அவை உடனடியாக நீக்கப்படவும் அகதிகளான மக்கள் மீண்டும் குடியேறவும் வேண்டியன செய்வோம்.
- தமிழர் பிரதேசங்களின் முன்னேற்றங்களுக்காகவும் தமிழர்களின் வாழ்வில் செழிப்பு எழுச்சி பெறவும் மேலைத் தேச நாடுகளில் உள்ள இலட்சக்கணக்கான எமது சகோதரர்களின் வளங்கள் வந்தடைய வழிகள் செய்வோம்.
- இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் உதவிகள் எமது மக்களையும் பிரதேசங்களையும் தவறாது வந்தடைய அனைத்தும் செய்வோம்.
- இலங்கை மக்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமைகளை தவறாது அங்கீகரிப்போம். ஆனால் தமிழர் தேசத்தில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கான முயற்சிகளை அங்கீகரிக்கமாட்டோம்.
- தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் மீண்டும் ஒருங்கிணைந்து ஒரே மாநிலமாக நிமிர்ந்து நிற்க அனைத்து சக்திகளினதும் ஆதரவை அணிதிரட்டுவோம்.
- தமிழர்கள் மத்தியில் இன்னமும் நிலவும் சாதி ஒடுக்கு முறைகளை இல்லாதொழிக்கப் போராடுவோம். சமூகத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்துக்காக அனைத்து முயற்சிகளையும் செய்வோம்.
- பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் - புளொட் ஆகிய கட்சிகள் நாம் இணைந்து செயற்படுகின்றோம். தமிழர்கள் மத்தியில் உண்மையான ஒற்றுமை உருவாகுவதற்கு உரிய முயற்சிகள் அனைத்தையும் மக்களின் ஆதரவோடு நேர்மையாக மேற்கொள்வோம்.

அத்துடன் இலங்கையின் அனைத்து முற்போக்கு ஜனநாயக சமூக சக்திகளின் மத்தியில் புதிய ஐக்கிய முன்னணியொன்று எழுச்சி பெற அனைத்தும் செய்வோம்.

# தமிழ்த்தேசியக்கொள்கையை எங்கள் உயிர் உள்ளவரை விடப்போவதில்லை

## தமிழ்த்தேசிய விடுதலைக்கூட்டமைப்பு வேட்பாளர் கஜேந்திரன் சபதம்

**தமிழ்த்தேசிய விடுதலைக்கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் சங்கதி இணையத் தளத்திற்கு 21.03.2010 அன்று வழங்கிய செவ்வியின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**



***தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து தூக்கி எறியப்பட்டமைக்குக் காரணம்.***

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அடிப் படைக்கொள்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றில் உறுதி யாக நின்றமையினாலும், கொள்கையைக் கைவிட்ட கூட்டமைப்பு தலைமையின் தீர்மா ணங்களுடன் உடன்பட மறுத்தமையினாலும், தமிழ் மக்க ளின் உரிமைப்போராட்டத்தினை உறுதியாக ஆதரித்தமையினாலும் நாங்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பிற்குள் கொண்டுவரப்பட்ட வர்கள் என்ற காரணத்தினாலும், கூட்டமைப்பு தலைமை களுக்கு பின்னால் உள்ள சிர வலிமை மிக்க சக்திகளின் ஆலோசனைகள் காரணமாகவும் நாங்கள் கூட்டமைப்பு தலை மையினால் கூட்டமைப்பில் இருந்து தூக்கி எறியப்பட்டோம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மூத்த தலை வர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக் கான தீர்வு தொடர்பான வரைபு ஒன்றினை தயாரித்திருந்தனர். அந்த தீர்வுத்திட்டமானது அடிப்படை அரசியல் கொள்கைகளான தேசி யம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் ஆகிய அடிப் படைக் கொள்கைகளை மறுதலிக்கும் வகை யில் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்தத் தீர்வுத் திட்டமானது தமிழ் மக்களின் அடிப்படை அர சியல் கொள்கைகளான தேசியம், சுயநிர் ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்ற அடிப்படைகளிலேயே அமைய வேண்டும். அதனை கைவிட முடி யாது என்ற நிலைப்பாட்டை நானும் கஜேந் திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநா தன் ஆகியோர் தொடர்ச்சியாக ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தோம்.

2009 டிசம்பர் மாதம் நடைபெற்ற சந் திப்பு ஒன்றில் கூட்டமைப்பின் மூத்த தலைமை கள் எங்களது ஆலோசனைகளை உள்ள டக்க முடியாது என்றும் தாயகம் ,தேசியம்,சுய நிர் ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் ஆகிய கொள்கைகளை கடைப் பிடிப்பதை இந்தியா விரும்பாது என்றும் இந்தியா விரும்புவதையே தீர்வுத்திட் டமாக முன்வைக்க முடியும் என்றும் உறுதிப் படக்கூறி விட்டது.

மேலும் தாம் தயாரித்துள்ள தீர்வுத்திட் டமே இறுதியானது என்றும் அதனையே முன் வைப்போம் என்றும் எங்களது ஆதரவு இல் லாவிட்டாலும் அதனை முன் வைத்தே தீரு வோம் என்றும அடித்துக்கூறியது.

***ஒற்றுமையை பாதுகாக்கவே த.தே. கூ.இன் தலைமைகளது தவறான நடவடிக் கைகளை நாம் முன்கூட்டியே மக்கள் மத்தி யில் வெளிப்படுத்தவில்லை.***

மக்களைப்போலவே நாங்களும் கூட்ட மைப்பின் ஒற்றுமையை விரும்பினோம். அதன் காரணமாக மீண்டும் மீண்டும் முயற்சி செய்து கூட்டமைப்பு தலைமை, கொள் கையை ஏற்றுக்கொள்ள வைக்க பகீரதப்பிரா யத்தனம் செய்தோம். அதற்காக இந்த பாரா ளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடிப்படை அரசியல் கொள்கைகளான தாய கம், தேசியம், சுய நிர்ணய உரிமை, தனித் துவமான இறைமை கொண்ட தேசம் என்ற அடிப்படையியே தீர்வுத் திட்டம் முன்வைக் கப்படும் என்றும் தேர்தலில் வென்ற பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் மேற்படி கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டு கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிக ளினதும் உத்தியோகபூர்வமான அனுமதி யுடனேயே சமர்ப்பிக்கப்படும் என்ற எழுத்து மூலமான உத்தரவாதத்தினை பெறுவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடுமை யாக முயற்சி செய்தார். எனினும் அவ்வாறான எழுத்து மூலமான உத்தரவாதம் எதனையும் தரமுடியாது என கூட்டமைப்பு தலைமை மறுத்துவிட்டது. அத்துடன் கொள்கைகளை கைவிட்டு ஒற்றுமைக்காக கூட்டமைப்பினுள் இருக்கும்படி வலியுறுத்தினர். கூட்டமைப்பின் ஒற்றுமையை கொள்கை அடிப்படையில் உறு தியாக நின்று கட்டிக்காக்க நாம் எவ்வளவோ முயன்றும் அதன் தலை மைகள் ஒத்துழைக்க வில்லை. இந்நிலையில் கூட்டமைப்பு கொள் கையை கைவிட்டுள்ளமையை நன்கு தெரிந்த நிலையில் மக்களுக்கு இந்த உண் மையை வெளிப்படுத்த வேண்டிய வரலாற் றுக்கடமை எங்களுக்கு எழுந்தது.

***கொள்கைப்பற்றுள்ள மக்களுக்கு கொள்கை அடிப்படையில் வாக்களிக்கும் வாய்ப்பை அளிப்பதற்காகவே தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்காது போட்டியிடத் தீர்மானித்தோம்.***

ஆரம்பத்தில் மேற்படி கூட்டமைப்பின் கொள்கை தவறிய நிலைப்பாட்டை மக்க ளுக்கு தெளிவுபடுத்திவிட்டு ஒதுங்கியிருக் கலாம் என்று யோசித்தோம். எனினும் கூட் டமைப்பு தலைமைகள் மீண்டும் வழி தவறி செல்வதனை இனங்கண்டு அவர்களை நிராகரிக்க விரும்பும் மக்களுக்கு மாற்றுத் தெரிவுக்கான வாய்ப்பு ஒன்றினை வழங்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே நாங் கள் போட்டியிடத் தீர்மானித்தோம்.




மாறாக நாங்கள் கூட்டமைப்பு தலைமை களின் தீர்மானங்கள் எதனையும் ஆட்சேபிக் காமல், எல்லாவற்றுக்கும் தலை அசைத்து சம்மதம் தெரிவித்திருந்தால் கூட்டமைப்பில் போட்டியிட எங்களுக்கு நிச்சயம் வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் 150000க்கும் அதி கமான மக்களும் 40 ஆயிரத்திற்கும் அதிக மான இளைஞர் , யுவதிகளும் உயிர் தியாகம் செய்த தமிழ்த்தேசியக் கொள்கையை விற்று பதவியைப் பெற நாங்கள் விரும்ப வில்லை.

***விடுதலைப் போராட்டம் பயங்கரவாத போராட்டம் அல்ல என்பதை நிரூபிக்கவே குடாநாட்டில் இருந்து வன்னிக்குச் சென் றோம்.***

2002-2006 ஆம் ஆண்டு வரை பாரா ளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட முன்னரும் பின்னரும் போர் நிறுத்த உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாள் தொடக்கம் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இரா ணுவம் வெளியேற்றப்பட்டு வலி வடக்கு உட் பட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்படல் வேண்டும் எனவும் கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு மீனவர்கள் சுதந்திர மாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படல் வேண் டும் எனவும் மாணவர்களது சுமூகமான கல் விக்கான சூழல் உருவாக்கப்படல் வேண்டும் எனவும் காணாமல் போனவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப் படல் வேண்டும் எனவும் சிறைக்கைதிகள் விடு விக்கப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தி உறுதியாக குரல்கொடுத்து வந்திருந்தோம்.

இச் செயற்பாடுகளை மக்களது தேவை களுக்கும் விருப்பங்களுக்கும் அமைவா கவே மேற்கொண்டிருந்தோம். 2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யுத்தசூழல் ஒன்று உருவாகியது. விடுதலைப்புலிகளை பயங் கரவாதம் என்று கூறி இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆளு கைக்கு உட் பட்டிருந்த வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்களையும் தனி மைப்படுத்தியது. அங்கு சர்வதேச இராஜ தந்திரிகள், வெளிநாட்டுத்தூதுவர்கள், வெளி நாட்டு,உள்நாட்டுஊடகவியலாளர்கள் செல்ல முடியாதவாறு தனிமைப்படுத்தப்பட் டது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர் களது ஆதரவுடன் பாராளுமன்றத் தேர்தலில் 22 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்ற கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் களும் விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பகுதிக்குச் செல்வதனை தவிர்ப்பதன் மூலம் இலங்கை அரசின் பொய்ப் பிரசாரத்திற்கு துணை புரியக்கூடாது என்ற நிலையில் 2006ஆம் ஆண்டு முற்பகுதியில் சில தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நானும் எனது குடும்பத் தினரும் வன்னிக்குச் சென்று அங்கு தங்கியி ருந்தோம்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி வன்னியைத் தனிமைப்படுத்தி யுத்தத்தை ஆரம்பித்த பொழுது நாங்கள் வன்னிக்குச் செல்லாது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்திருக்கலாம். அவ்வாறு இருந்தி ருந்தாலும் கூட எங்களது உயிருக்கு எவ்வித அச்சுறுத்த லும் ஏற்பட்டிருக்காது. ஏனெனில் புலிகளின் அமோக ஆதரவில் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் கூட ஸ்ரீலங்கா அரசு கூறுவது போன்று விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் புலிகளுக்கு எதிராக அரசு ஆரம்பித் துள்ள இராணுவ நடவடிக் கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு இராணு வக் கட்டுப்பாட்டுப் பிரதேசமே தமக்குப் பாதுகாப் பானது என்றும் கருதி அங்கு தங்கியியுள்ளனர் எனவும் பிரசாரம் செய்து வன்னி மக்கள் மீதான போரையும் இனப்படுகொலையையும சர்வ தேச ரீதியில் நியாயப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கும் நாம் சந்தர்ப்பம் வழங்கியவர்க ளாக இருந்திருப்போம். அவ்வாறான ஒரு விடயம் அரசுக்கு அரசியல் ரீதியாக மிகவும் சாதகமா னது என்பதால் நிச்சயம் எமக்கு ஆபத்து ஏற் பட்டிருக்காது.

இவ்வாறான ஓர் பிரசாரத்திற்கு இடமளிக் கக்கூடாது என்ற காரணத்திற்காக தேசிய தலைமையின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் வன்னிக்குச் சென்று தங்கியிருந்தோம். அதன் காரணமாக நாம் யாழ். குடாநாட்டு மக் களுடன் தங்கியிருக்க முடியாத நிலை ஏற் பட்டது.

***நான் இலங்கை திரும்ப முடியாத அள வுக்கு எனக்கு எதிராக சட்டப்பிரச்சினைகள் இருந்ததாகக் கூறப்படுவதிலும் இலங்கை திரும்புவதற்காக ராஜபக்ஷேக்களுடன் இரக சிய ஒப்பந்தம் செய்தேன் என்றும் கூறும் குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையும் இல்லை.***

கடந்த 2008 டிசம்பர் மாதம் தமிழ்த்தேசி யக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்க ளாகிய ஜெயானந்தமூர்த்தி, அரியநேத்திரன் , நான் உட்பட மூவருக்கு எதிராக ஸ்ரீலங்கா குற்றப்புலனாய்வுத் துறையினரால் கொழும்பு நீத வான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. நான் முன்னர் குறிப்பிட்டபடி மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்துகொள்வ தற்காக நவம்பர் 28இல் வெளிநாட்டுக்கு சென்றிருந்த நிலையில் டிசம்பர் 2008இல் வழக்குத்தாக் கல் செய்யப்பட்டது. பாராளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் மட் டும் இலங்கையில் இருந்தார். ஜேர்மனியில் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு உரையாற் றும் பொழுது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக கருத்துக்களைக் கூறியதாகவும் அது அரசியல் அமைப்பை மீறும் செயல் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு அரசியல் அமைப்பில் ஆறாம் திருத்தச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் துறையின ரால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் வழக் குத்தாக்கல் செய்யப்பட்டது.

எமக்கு எதிராக குற்றச்சாட்டுகளானது புதி னம் . கொம் என்ற இணையத்தளத்தில் வெளியான தகவல்களின் அடிப்படையி லேயே அமைந்திருந்தது. அந்த ஆதாரத் தினை விட வேறு எந்தவிதமான ஆதாரங்க ளும் அரசிடம் இருக்கவில்லை. அந்த இணை யத்தளமானது உலகில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உத்தீ யோகபூர்வமான , அங்கீ கரிக்கப்பட்ட செய்தி ஊட கம் அல்ல. அரசியல் அமைப்பை மீறும் குற் றச்சாட்டு தொடர்பான எந்தவொரு வழக்கும் இலங்கையின் உச்ச நீதிமன்றத்திலேயே (சுப்ரீம் கோட்) தாக்கல் செய்யமுடியும். ஆனால் எமக்கு எதிராக நீத வான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளதால் குறிப்பிட்ட நீதி மன்றிற்கு குறித்த வழக்கை விசாரிப்பதற்கான எந்த விதமான சட்ட அதிகாரமும் கிடையாது எனது தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி தவராஜா வாதிட்டதுடன் தனது தரப்பினருக்கு எதிரான அந்த வழக்கை தள்ளுபடி செய்வதன் மூலம் அவர்கள் நாட்டிற்கு வந்து சுதந்திரமான முறையில் தமது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என வும் கோரியிருந்தார்.

நீதவான் நீதிமன்றிற்கு வழக்கை விசாரிக் கும் அதிகாரம் இல்லாமல் இருந்தமையி னாலே அந்த வேளையில் இலங்கையில் தங் கியிருந்த மட்டக்களப்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட வில்லை.

ஆனால் எம்மை அச்சுறுத்தி செயற்பாடு களை முடக்க வேண்டும் என்பதற்காக குற் றப்புலனாய்வுத்திணைக்களமானது குறித்த வழக்கை மீளப்பெற்றுக்கொள்ளாது காலத்தை இழுத்தடித்தது. எனினும் ஒருவரு டங்கள் கழி வதற்கு முன்னர் நீதவான் நீதி மன்றம் குறித்த வழக்கை செய்தாக வேண்டும் என்ற 2009 ஒக்டோபர் 25ஆம்திகதி சி.ஐ.டியி னால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

சட்ட ரீதியாக எனக்கு எதிராக இருந்த ஒரே ஒரு குற்றச்சாட்டு அதுவும் ஆதாரமற்ற குற் றச்சாட்டு இதுவேயாகும். அந்த வழக்குத் தள் ளுபடி செய்யப்பட்ட நிலையில் இலங்கைக்கு திரும்புவதில் சட்ட ரீதியாக எந்தப் பிரச்சினை யும் இருக்கவில்லை. *(16ஆம் பக்கம் பார்க்க)*

# இன்றுவரை 24,145 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு

## நிக்கொட் திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் நிறுவனத்தினால் மீள்குடிய மர்ந்த குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தில் நேற்றுவரை 24 ஆயிரத்து 145 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் அவர்களது வங்கிக் கணக்கில் வரவிடப்பட்டுள்ளதாக நிக்கொட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் தெரிவித்துள்ளார்.

தேசத்தை கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் 750 மில்லியன் ரூபா நிக்கொட் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. இவ் நிதி அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இத் தொகை இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த குடும்பங்களில் 30 ஆயிரத்து 500 குடும்பங் களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வரு கின்றது.

யாழ்ப்பாணத்தில் 22 ஆயிரம் குடும்பங்களுக்கும் மன்னாரில் 2 ஆயிரத்து 750 குடும்பங்களுக்கும் வவுனியாவில் ஆயிரத்து 240 குடும்பங்களுக்கும் கிளி நொச்சியில் 4 ஆயிரத்து 510 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்நிதியினை மீள்குடியமர்ந்த குடும்பங்கள் சிறுகைத்தொழில், மீன்பிடி, விவசாயம் போன்ற முயற்சிகளில் பயன்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-7)

# மே மாதம் வரையிலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடையாது

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் வரையிலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடையாதெனக் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரிச் சலுகை வழங்குவதன் மூலம் பொருள் விலை உயர்வினை கட்டுப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரையிலும் பொருட்களின் விலைகளில் மாற்றும் ஏற்படாதென எதிர்பார்க்கப்படுகிறது.

புண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் பத்து அத்தியாவசிய பொருட்களுக்கு இவ்வாறு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வெங்காயம், பருப்பு, வெள்ளைப்பூண்டு, செமன் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற பொருட்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. (2-4)

# தேர்தல் வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட 176 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட 176 பேரை கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 79 பேரை இதுவரை தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தேர்தல் சட்டங்களை மீறியமை குறித்து இதுவரை 151 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தலுக்கு பொறுப்பான பொலிஸ் பணியகம் தெரிவித்துள்ளது.

ஒரே கட்சியை சேர்ந்த ஆதரவாளர்கள் தமது கட்சியை சேர்ந்த ஏனைய ஆதரவாளர்களுக்கு எதிராக இந்த முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

தற்போது கிடைத்துள்ள தேர்தல் வன்முறைச் செயல்கள் சம்பந்தமான முறைப்பாடுகளில் 95 வீதமான முறைப்பாடுகள் சிறிய சிறிய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பித்த 85 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பிக்கப்பட்ட எண்பத்தையாயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்பில் கலந்து கொள்ளும் நோக்கில் விண்ணப்பித்த எண்பத்து நாலாயிரத்து 539 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் அனுப்பி வைத்தல், விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்யாமை போன்ற காரணிகளினால் இவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

இம்முறை தபால் மூல வாக்களிப்பிற்காக 4 இலட்சத்து 99 ஆயிரத்து 971 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களுமே தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பித்து ள்ளனர்.

நான்கு இலட்சத்து 15 ஆயிரத்து 432 பேர் தபால் மூல வாக்களிப்பிற்காக தகுதி பெற்றுள்ளனர் என பப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

குருணாகல் மாவட்டத்திலிருந்து அதிகளவான காலம் தாழ்த்திய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ஓ-4)


ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை எதிர்ப்போம்!



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட
தமிழ்த் தேசிய விடுதலைக்
கூட்டமைப்பு வேட்பாளர்கள்

ந.சிறீகாந்தா - எம்.கே.சிவாஜிலிங்கம்

(முன்னாள் - பாராளுமன்ற உறுப்பினர்கள்)

2



3

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தேசியம்-தாயகம்-சுயநிர்ணய உரிமை

X

- தமிழ் ஈழதேசம், சிங்களதேசம் இணைந்த இலங்கை ஒன்றியம் (Union of Ceylon)என்ற கூட்டு இணைப்பாட்சியின் (Confederation) அடிப்படையிலேயே நிரந்தரத் தீர்வு காணப்பட முடியும்.
- 12.000 தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்.
- பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றை மீளப்பெறு.
- வன்னிப் போரிலும், கிழக்குப் போரிலும் 50.000 தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைக்காக சர்வதேச நீதி விசாரணையைக் கோருவோம்.
- சுமார் ஐந்து இலட்சம் அகதிகளின் மீள்குடியேற்றத்தை ஐ.நா.விடம் ஒப்படை.
- உயர்பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்கு.
- தமிழர் தாயகத்தில் இராணுவ ஆட்சியை மீளப்பெறு.
- சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து.
- போரில் கொல்லப்பட்டவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் சொத்து அழிவுகளுக்கும் போதியளவு நஷ்ட ஈட்டை வழங்கு.
- வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை (Interim Self - Governing Authority - ISGA) நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை நிறுவ நடவடிக்கை எடு.

(சி-4750)

# நெல் கொள்வனவு நடவடிக்கை பல மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பு

விவசாய அமைச்சு மூன்று வாரங்களுக்கு முன் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பித்த நெல் கொள்வனவு நடவடிக்கைகளை தற்போது பொலனறுவை, அநுராதபுரம், பதுளை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கும் விஸ்தரித்துள்ளது.

இதேவேளை அம்பாறை தவிர்ந்த ஏனைய வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நெல் கொள்வனவு அடுத்த வாரமளவிலேயே ஆரம்பமாகும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதன்படி நாட்டரிசி ஒரு கிலோ 28 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோ 30ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுவதாகவும் சுமார் 2 இலட்சம் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாய சங்கங்கள், கூட்டுறவு இயக்கங்கள் மூலமும், அமைச்சின் சேகரிப்பு நிலையங்கள் மூலமும் நெல்கொள்வனவு இடம்பெறுவதாகவும் அடுத்த மாத இறுதி வரை நெல்கொள்வனவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# மீளக்குடியேறியோருக்கு புதிதாக 3 ஆயிரத்து 700 வீடுகள்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டிருப்போருக்காக 3 ஆயிரத்து 700 வீடுகளை புதிதாக அமைக்க திட்டமிடப்பட்டிருப்பதாக மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை மோதல்களின் போது சேதமடைந்த 2 ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் அபிவிருத்திகளை முன்னெடுக்கவும் இடம் பெயர்ந்தோருக்கு பல்வேறு உதவிகளைச் செய்யவுமென முன்வந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் 15 க்கு ஜனாதிபதி செயலணி அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் யூ.என்.ஹெபிட்டாட் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நர்ட் ஆகிய தன்னார்வ நிறுவனங்களே வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளன. (2-4)

# இலங்கையின் கௌரவத்தை காப்பது சகல இனங்களின் பொறுப்பாகும்

## தம்பர அமில தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நாட்டிற்கு ஒவ்வாத போலியான இராச்சியம். எனவே இதனை மாற்றியமைக்க பொது மக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். இலங்கையின் கௌரவத்தை பாதுகாப்பது சகல இன மக்களினதும் பொறுப்பாகும் என தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் தெரிவித்தார்.

தேசிய பிக்கு முன்னணியின் விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேசிய நூலகத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய தம்பர அமிலதேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கூயியதாவது,

போலியான தேசப் பற்றாளர்களின் கரங்களில் எமது தாய்நாடு சிக்கிக்கொண்டுள்ளது இங்கு அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக் எதிராக ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச மனித உரிமைகளுக்கான அமைப்புக்களும் மிகத் தீவிரமாக குரல் கொடுக்க வேண்டும.

நாடு சீரழிந்து வழிதவறி செல்லுமாயின் அதனை கை கட்டி வெறுமனே உண்மையான தேசப் பற்றுள்ளவர்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. உயிர்த் தியாகம் செய்தேனும் நாட்டை பாதுகாப்பர். எனவே தாய் நாட்டை கயவர்களிடமிருந்து பாதுகாக்கும் எமது போராட்டம் இந்த நிமிடம் முதல் ஆரம்பிக்கப்படும்.

மேலும் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் நல்லாட்சியை ஏற்படுத்துவது ஜனநாயகத்தை பாதுகாப்பது, வடக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவது மற்றும் மீள்குடியமர்த்துவது உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தை வலியுறுத்தினோம். இருப்பினும் தமது அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத் ததே தவிர இலங்கையின் தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் சிந்திக்கவில்லை

மக்களை போலியான சர்வதேச மாயைக்குள் வைத்துக் கொண்டு உள்நாட்டில் பாரியளவிலான ஜனநாய விரோத செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வந்தது. இதன் உச்சகட்டமாக கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத்பொன்சேகாவின் கைதை குறிப்பிடலாம் என்றார். (2-4)

# தமிழ்த்தேசிய கொள்கையை...

14ஆம் பக்கத் தொடர்ச்சி

***எனது சகோதரர் கடத்தப்பட்ட பொழுது அவரை விடுவிப்பதற்காக ராஜபக்சேக்க ளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதான செய்திகள் அப்பட்டமான பொய்.***

இது பற்றி வெளியான செய்தியில் எனது சகோதரர் கடத்தப்பட்டு இரண்டு நாட்களி லேயே விடுவிக்கப்பட்டதாகவும் இதுவரை காலமும் கடத்தப்பட்டவர்களில் யாராவது இரண்டு நாட்களில் விடுக்கப்பட்டார்களா என்றும் கேள்வி எழுப்பப்பட்டிருந்ததுடன் நான் இராஜபக்ஷேக்களுடன் ஒப்பந்தம் செய்தமையினாலேயே அவ்வாறு இரண்டு நாளில் விடுவிக்கக்கூடியதாக பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டிருந்தது.

எனது சகோதரர் யாழ் பல்கலைக்கழகத் தின் நிரந்தர விரிவுரையாளர். அவர் தனது மேற்படிப்பை தொடர்வதற்காக பல்கலைக்கழ கத்தினால் வழங்கப்பட்ட கற்கைநெறிக்கால விடுமுறையில் மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் தனது மேற்படிப்பை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் 2008 மார்ச் 24 ஆம் திகதி கடத்தப்பட்டு மிகக் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு 14 நாட்க ளின் பின்னர் 2008 ஏப்ரல் 8 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார்.

உண்மை இவ்வாறு இருக்க இரண்டு நாட்களில் விடுவிக்கப்பட்டதாக கூறப்படு கிறது. நான் ராஜபக்சேக்களுடன் ஒப்பந்தம் செய்ததாக கூறுவது அப்பட்டமான பொய்யா கும். அவர் கைது செய்யப்பட்ட செய்தியும் 14 நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்ட செய் தியும் அனைத்து உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

சகோதரர் கடத்தப்பட்ட பொழுது அவரை விடுவிப்பதற்காக அரசாங்கத்துடன் எந்த ஒரு ஒப்பந்தமும் செய்யும் எண்ணம் எனக்கு இருந் திருக்கவில்லை. புனிதமான இலட்சியத்திற் காக பல்லாயிரம் இளைஞர்களும் மக்களும் தங்கள் உயிர்களை தினம் தினம் தியாகம் செய்து கொண்டிருந்த நிலையில் என் சகோ தரனின் விடுதலைக்காக அரசிடம் ஒப்பந்தம் செய்து அரசிடம் மண்டியிடக் கூடாது என்பதில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன்.

எனது சகோதரர் யாழ் பல்கலைக்கழக நிரந்தர விரிவுரையாளராக இருந்த காரணத் தினால் அவரது விடுதலைக்காக யாழ் பல் கலைக்கழக துணைவேந்தர் மற்றும் மாண வர் ஒன்றியத்தினரும் ஆசிரியர்களும் கடுமையாக முயற்சி செய்திருந்தனர். பல் கலைக்கழக மாணவர்கள் வகுப்பு பகிஸ் கரிப்பிலும் ஈடுபட் டிருந்தனர். அத்துடன் மனித உரிமை அமைப்புக்களும் கொழும் பிலுள்ள தூதரகங்களும் மேற்கொண்ட கடுமையான முயற்சியினாலேயே எனது சகோதரர் விடுவிக் கப்பட்டார்.

இலங்கை அரச படைகளால் கடத்தப்பட்டு பல்லாயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயிருந்தார்கள். கொடூரமாக கொலை செய்யப்பட்டு வீதிகளில் வீசப்பட்டிருந்தார்கள். அதே வேளை மேலும் பல நூற்றுக் கணக்கானோர் கடத்தப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப் பட்ட பின்னர் யாருடைய தலையீடும் இன்றி குற்றுயிரும் குலை உயிருமாக வீதிகளில் வீசப் பட்டனர் என்பதும் இந்த மண்ணில் வாழ்ந்த மக்களுக்கு நன்றாகவே தெரியும். அவ்வாறு வீசப்பட்டவர்களில் என்னுடைய தம்பியும் ஒருவர்.

வன்னிப்போர் இறுதிக்கட்டத்தை அடையும் வரை எனது தாயாரும் உடன் பிறந்த சகோதரியும் அவரது ஒருமாத கைக்குழந்தையும் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் வன்னியில்தான் வாழ்ந்தார்கள். வன்னி மக்கள் அனுபவித்த அத்தனை துன்பங்களையும் கொடுமைகளையும் அவர்களும் அனுபவித்தார்கள். நான் கடந்த 2008 ஆம் ஆண்டு மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்ளுவதற்காக வன்னியில் இருந்து கடந்த 2008 நவம் பர் நடுப்பகுதியில் கொழும்புக்குச் சென்றேன். அப்பொழுது எனது சகோதரிக்கு குழந்தை பிறந்து 40 நாட்கள் மட்டுமே கடந்திருந்தது. நான் விரும்பியிருந்தால் எனது சகோதரியையும் அவரது குழந்தை மற்றும் கணவருடன் எனது தாயாரையும் அழைத்துக் கொண்டு கொழும்பு சென்றிருக்க முடியும். ஆனா லும் நான் அதனைச் செய்யவில்லை. ஏனெனில் நான் சந்தப்ப வாதியாக நடந்து கொள்ள விரும்பவில்லை.

இறுதியாக வன்னியில் இருந்து அனைத்தையும் இழந்து அவர்கள் நடைப்பிணங்களாக முகாமுக்குச் சென்றடைந்தனர். எனது சகோதரி தனது ஐந்து மாதங்கள் நிரம்பிய குழந்தையுடன் நவம்பர் மாதம் முற்பகுதி வரை முகாமில் இருந்து அத்தனை துன்பங்களையும் கொடுமைகளையும் அனுபவித்தார். நவம்பர் மாத முற்பகுதியில் தேர்தலுக்காக பெருமளவு மக்கள் விடுவிக்கப்பட்ட பொழுதிலேயே எனது சகோதரியும் முகாமில் இருந்து வெளியேறமுடிந்தது.

சிலர் கூறுவது போன்று 2008 ஏப்ரல் 8இல் தம்பி விடுவிக்கப்பட்டதிலிருந்து எனக்கு ராஜபக்ஷேக்களுடன் ஒப்பந்தம் ஒன்று இருந்திருந்தால் நான் மே மாதம் உடனடியாகவே இலங்கைக்குத் திரும்பி ராஜபக்ஷேக் களின் புண்ணியத்தில் எனது சகோதரியை முகாமில் இருந்து மீட்டு கொழும்பில் தங்க வைத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறான வழி முறைகளை கையாள நான் விரும்பவில்லை. அதனால் எனது தங்கை 5 மாதங்களுக்கு மேல் முகாமில் இருந்து அவலப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாங்கள் தமிழ் தேசியக் கொள்கைகளை விட்டுக்கொடுப்பதற்கு எங்கள் உயிருள்ள வரை இணங்கப் போவதில்லை என்பதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ள தேசத்திற்கு எதிரான சக்திகள் பலவாறான பொய்யான பரப்புரை களை எங்களுக்கு எதிராக கட்ட விழ்த்து விட்டுள்ளன. (ரு)


## 45ஆம் நாள் நினைவு நிகழ்வு

பிறப்பு 11 05 1988





பிறப்பு 20 08 1988

வேலாயுதம் திரவிழி

இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன்

மறைவு:- 2010.02.09

(பல்கலைக்கழக, முதலாமாண்டு மாணவர்கள் முகாமைத்துவ பீடம்)

*2010.02.09* அன்று அகால மரணமெய்திய இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன், வேலாயுதம் திரவிழி ஆகியோரின் 45ஆம்நாள் நினைவு நிகழ்வு *2010.03.25* வியாழன் அன்று எமது இல்லத்தில் இடம்பெறும். அன்று இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பல்கலைகழக சமூகத்தினர், சக பணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

109, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பெற்றோர்

(935)



## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பின்முற்றாகும் கட்டளை

வழ.இல: நானாவிதம் :2/2010

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 373 பிரிவின் கீழான மனுவின் விடயத்தில்

செல்லத்துரை கைம்பெண் மல்லிகாதேவி
இல.50/15, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்

இவ்வழக்கு 2010 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் அவர்கள் முன்னிலையில் வந்தபோது மனுதார் சமூகத்தில் சார்பில் சட்டத்தரணி (திருமதி) ச. இளங்கோவன் தோன்றியிருக்க மனுதார் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப் பணங்கள் ஆவணங்கள் ம1 – ம7 வரை மனு, சத்தியக்கூற்று ஆகியவற்றை பரிசீலித்து மனுவில் கோரிய நிவாரணங்களை வழங்குவது நியாயமானதென திருப்தியடைந்ததன் பேரில் மனுதாரின் மகனான செல்லத்துரை சாந்தகுமார் என்பவர் 1996 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதியன்று கடத்தப்பட்டு காணாமற்போயுள்ளபடியால் இறந்துவிட்டாரென்று விளம்பி இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்பட்டது.

இப் பின்முற்றாகும் கட்டளைக்கு ஏதும் ஆட்சேபணை இருப்பின் இந் நீதிமன்றில் 2010 ஆம் ஆண்டு மாசி மாதம் 26 திகதி தோன்றி தெரிவிக்குமாறும் அவ்வாறு தெரிவிக்காதவரின் இப் பின் முற்றாகும் கட்டளை முற்றான கட்டளையாக்கப்படுமெனவும் இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

*2010 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் நாளன்று*

வரைவு
மனுதார் சட்டத்தரணி

மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்
A.PREMASHANKER
DISTRICT JUDGE,
JAFFNA.

10.03.2010

இன்றைய 8 ஆம் இல தின குறிப்பின் பிரகாரம் பின் முற்றாக்கும் கட்டளையின் ஆட் சேபனைத் திகதி 14.05.2010 வரை நீடிக்கப்படுகின்றது.

(938)

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கின்றான். அதனால் தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கின்றார்கள். -அங்கேரி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குடாநாட்டில் தேர்தல் திருவிழா பொதுமக்கள் பாராமுகம்

அடேங்கப்பா! தேர்தல் திருவிழாவில் யாழ். குடாநாடு வண்ணத்திரையாக காட்சி அளிக்கின்றது.

சுவர்கள் எங்கும் வேட்பாளப் பெருமக்களின் திருவுருவப்படங்கள். பார்க்க மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

எங்கட நாட்டில இப்படியும் நடக்கிறது. 324 வேட்பாளப் பெருமக்களும் தங்கள் திருமுகங்களை காட்டுவதற்காக வீட்டு மதில்கள் பொது இடங்கள் என எங்கும் சுவரொட்டிகளை ஒட்டி பிரசாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தேர்தல் என்று வந்துவிட்டால் இவை தேவைதான். ஆனால் இவை மக்களுக்கும் தேவையாக இருக்க வேண்டும்.

தனித்து வேட்பாளர்களுக்கு மட்டும் தேர்தல் என்றால் அது தேர்தல் ஆகமாட்டாது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் பற்றி பொதுமக்களின் நிலைப்பாடு என்ன என்று ஆய்வு செய்தால், அவர்கள் தாம் உண்டு தம் வேலையுண்டு என்ற மனநிலையில் இருப்பதைக் கண்டறிய முடியும்.

எவருடைய தேர்தல் பிரசாரமும் இவர்களை ஆதரிக்க வேண்டும். இவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற உத்வேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை.

இன்னமும் பதின்னான்கு நாட்கள் வாக்கெடுப்பிற்கான காத்திருப்பாக இருப்பதால் அந்த நாட்களுக்குள் வேட்பாளர்கள் மக்களை தத்தம் பக்கம் இழுத்து விடுவார்களோ என்னவோ, அதுபற்றி வியாக்கியானம், விமர்சனம் ஆகாது எனபதால அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் நடைபெறப்போகும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஆர்வக் குறைவுடையவர்களாக, இருப்பதன் காரணம் என்ன? என்பது குறித்துச் சிந்திப்பது மிகவும் அவசியமானதாகும்.

அவ்வாறானதொரு சிந்தனையின் முடிபு பொதுமக்கள் யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்து விட்டார்கள்.

அதில் குறிப்பாக 'நம்பிக்கை' இழக்கப்பட்டு விட்டது.

எனவே அவர்களுக்கு அரசியல் மீதும், அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கை இல்லை.

ஏதோ இந்த நாட்டில் பிறந்துவிட்டோம். ஆட்சியாளர்களின் அடிமைப்படுத்தலில் காலம் கழிக்க வேண்டியது அவ்வளவுதான்.

இந்த மனஉணர்வு இருக்கும்வரை பொதுமக்கள் தேர்தல் விடயங்களில் ஈர்ப்பு அற்றவர்களாகவே இருப்பார்கள்.

# பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முப்படைகளின் முன்னாள் பிரதானியும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்யக்கோரி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டமானது ஜனநாயக தேசிய கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டம் நேற்று காலை 10.30 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமானது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித்த ஹேரத், சுனில் ஹெந்துன்னெத்தி, பிமல் ரத்னாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இராணுவ நீதிமன்றம் ஏமாற்றுவேலைகளை பின்பற்றுகின்றது. சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய் போன்ற வசனங்கள் பொறிக்கப்பட்ட புதாகைகளையும் ஏந்தியிருந்தனர். அத்துடன் இந்த அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் மற்றும் இராணுவ நீதிமன்றத்திற்கும் எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

அத்துடன் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இந்த நாட்டிலே பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி இந்த நாட்டிற்கும் இராணுவத்திற்கும் எதிராக போராடிய, யுத்தம் செய்த புலித் தலைவர்கள் அமைச்சுப்பதவிகளை வகித்து அரச மாளிகையில் சுகபோக வாழ்க்கை வாழ்வதாக எடுத்துரைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், விடுதலைப்புலிகளை ஒழித்து நாட்டை காப்பாற்றிய தளபதியை சிறையில் அடைத்து வைத்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினர். (எ-5)

# வியாபார உரிமங்களை பெற அறிவுறுத்து

குறிகாட்டுவான் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் பலர் இன்னமும் பிரதேச சபையினரிடம் வியாபார உரிமம் (லைசன்ஸ்) பெற்றுக் கொள்ளவில்லை என அறிவிக்கப்படுகிறது.

எனவே இப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் 2010ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தை வேலணை (தீவகம் தெற்கு) பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி க.விஜயகுமார் தெரிவித்துள்ளார். (ச-22)

# பென்சில் வேண்டாம் பேனா வேண்டும்

## கருஜெயசூரியா கேட்கிறார்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் புள்ளடியிட பென்சிலுககுப பதில் பேனாவைப் பயன்படுத்த அனுமதியளிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

பென்சில் பயன்படுத்தப்படுவதால் புள்ளடிகளில் மாற்றங்களை ஏற்படுத்த பலர் முயற்சிக்கலாம் என்பதால் இந்தக் கோரிக்கையை தேர்தல் ஆணையாளரிடம் முன்வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-4)

# அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள்

(அல்வாய்)

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி நடத்தப்படவுள்ளது. அரச மற்றும் அரசுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் கடமையாற்றும் இலக்கிய கலைத்துறையில் ஆர்வமுள்ள ஊழியர்களினது ஆக்கத்திறனை வெளிக்கொணர்ந்து அவற்றை ஊக்குவிக்குமுகமாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது போட்டி பாடல், கவிதை, சிறுகதை, சிறுவர்கதை, குறுநாடகம், சித்திரம் என 6 பிரிவுகளில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இடம் பெறவுள்ளது.

போட்டியின் நிபந்தனைகளாக ஏ-4 அளவிலான தாளின் தனிப்பக்கத்தில் மிகவும் தெளிவான கையெழுத்து பிரதியாகவோ அல்லது தட்டச்சு பிரதியாகவோ அல்லது கணனி பிரதியாகவோ சமர்ப்பிக்கமுடியும் எனவும், போட்டியாளர் ஒருவர் ஒவ்வொரு பிரிவின் கீழும் ஓர் ஆக்கம் என்றவகையில் எல்லாமாக 6 ஆக்கங்கள் சமர்ப்பிக்கமுடியும் எனவும் ஒவ்வொரு ஆக்கத்திற்கு வெவ்வேறான விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

மேலும் விண்ணப்பப்படிவத்தினை முழுமையாக பூரணப்படுத்தி நிறுவனத்தலைவரின் விதப்புரையுடன் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சகல ஆக்கங்களும் சொந்தமாக இருப்பதுடன் மொழிபெயர்க்கப்பட்டவையாக அல்லது பிரதிபண்ணப்பட்டவையாக இருத்தல் கூடாது எனவும் இதில் சிறுகதை 1500 சொற்களுக்கு குறையாமல் 16 பக்கங்களுக்கு மேற்படாத வகையில் அமைதல் வேண்டும். பாடல் போட்டி 3 1/2 நிமிட காலப்பகுதியில் இசை நயத்துடன் கூடிய ஒழுங்குடன் அமைத்தல் வேணடும்.

கவிதை 10 செய்யுள் பகுதியினை மாத்திரம் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும் சிறுவர்கதை 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு பொருத்தமான விடயத்தை உள்ளடக்கியதாக இலகுவான மொழிநடையில் எழுதல் வேண்டும்.

இவ் ஆக்கங்கள் தேசியத்தை முன்னெடுத்துசெல்வதற்கு உரிய புதிய பரிமாணத்தை கொண்டவையாக இருத்தல் வேண்டும். ஆக்கங்கள் வர்ணபடங்களுடன் 16 பக்கங்களுக்கு மேற்படாமல் 11 X 8 1/2 அங்குல அளவுடையதாளில் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.


குறுநாடகம் ஆகக்கூடிய 45 நிமிடம் கால வரையறையினை கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் புத்தெழுச்சி உடையதான புதியதோர் இலங்கை என்ற தலைப்பின் கீழ் சித்திரம் வரையப்படவேண்டும்.

தேவையான மூலகங்கள் கடதாசி, துணி, (பலகை) விரும்பிய வர்ணம்தீட்டும் மூலகங் களை பயன்படுத்த முடியும் எனவும் சித்திரம் வரையும் கடதாசியின் அளவு 18 X 14 அங்குல தாளில் 24X18 அங்குலம் வரை பிரயோகிக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இப்போட்டியில் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு விருது மற்றும் சான்றிதழ்கள் பரிசு வழங்கப்படுவதுடன் வெற்றிபெறும் சித்திரம் கண்காட்சியில் வைக்கப்படும் எனவும் ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகத்க்கு முன்னர் செயலாளர் கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சு, 8 ஆம் மாடி செற்ஸ்ரீபாய பத்திரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் அரசு ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி தொடர் 2010 எனக் குறிப்பிடப்படல் வேண்டும் என தேசிய மரபுரிமை அமைச்சின் செயலாளர் விமல்ரூபசிங்க அறிவித்துள்ளார். (4-19)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மதமும் ஒழுக்கமும்



இரசாயனமும் இயற்கை விஞ்ஞானமும் எப்படி இந்த பௌதிக உலகம் பற்றிய உண்மைகளைக் கையாள்கின்றனவோ அதைப் போலவே மதம் அரிய தத்துவ உண்மைகளைக் கையாள்கிறது ஒருவன் இரசாயனத்தைக் கற்க இயற்கை என்னும் புத்தகத்தை படிக்க பேண்டும். உன்னுடைய மனம், இதயம் ஆகியவை தாம் மதத்தை கற்பதற்கு நீ படிக்க வேண்டிய நூல்களாகும்.

ஞானி பெரும்பாலும் பௌதிக வி ஞ்ஞானம் பற்றித் தெரியாதவராக இருக்கிறார். ஏனென்றால் அவர் தமக்குள் இருக்கும் புத்தகத்தை படிக்கிறார். அது பௌதிக விஞ்ஞானத்தை தெரிந்து கொள்வதற்கு தவறான புத்தகமாகும்.

விஞ்ஞானியும் கூடப் பெரும்பாலும் மதத்தைப் பற்றித் தெரியாதவராக இருக்கிறார். ஏனென்றால் அவருங் கூடத் தவறான புத்தகத்தையே படிக்கிறார். அதாவது அவர் தமக்கு வெளியே உள்ள புத்தகத்தைப்படிக்கிறார்.

# பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் கட்டாய பாடம்

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை பல்கலைக்கழக பிரவேசம் பெறும் மாணவர்கள் அனைவரும் ஆங்கிலத்தை ஒரு பாடமாக கற்க வேண்டும் என கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முதல் வருட மாணவர்களாக பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்கள் எந்த பாடநெறியைக் கற்றாலும் ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கற்க வேண்டும் என உயர் கல்வி அமைச்சு கொள்கை அளவில் தீர்மானித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வா வர்ணபால தெரிவித்தார்.

நவீன உலகத்தை எதிர்கொள்ளும் தொழிற் சந்தைக்கு ஏற்ற வகையிலான உயர் கல்விக்கு ஆங்கில மொழி அத்தியவசிய ஒன்றாக உள்ளது.

அந்த நிலையை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார். (2-4)

# நிக்கொட் கடன்விருத்தித் திட்டம் வடமாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது

## திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் கடன் விருத்தித் திட்டம் என்கின்ற புதிய திட்டத்தை அரசாங்கம் வடமாகாணத்தில் அமுல்படுத்தவுள்ளதாக நிக்கோட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்காக 1600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது 1300 மில்லியன் ரூபா ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் 300 மில்லியன் அரசாங்கத்தினாலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய 150 மில்லியன் ரூபா நிதியில் ஒரு வைத்தியசாலை புனரமைப்புக்கும் பாடசாலை, விவசாய, கால்நடை அபிவிருத்தி புனரமைப்பிற்கும் 170 மில்லியன் ரூபாவும் கிராமிய மின்திட்டங்களுக்காக 100 மில்லியன் ரூபாவும் அரசாங்க நிறுவனங்களின் உடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 50 மில்லியன் ரூபாவும் கிராமிய வீதிகளின் புனரமைப்பிற்காக 100 மில்லியன் ரூபாவும் குளங்கள் புனரமைப்பிற்கு 100மில்லியன் ரூபாவும் கிராமிய மட்டத்திலான உட்கட்டமைப்பு வைத்தியசாலை உபகரணங்களுக்கு 100 மில்லியன் ரூபாவும் திணைக்களங்களின் அபிவிருத்திக்கு200 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் மே மாதம் ஆரம்பத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-2)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேர்தல் செயலகத்திலும் கண்காணிப்பு

## கண்காணிப்புக் குழுக்களுக்கு அனுமதி

(கொழும்பு)

தேர்தல் செயலகத்திலும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இம்முறை கண்காணிப்புக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதன்படி இரண்டு தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் தினமன்று ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

பவ்ரல் மற்றும் சீ.எம்.ஈ.வீ ஆகிய இரண்டு உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு குழுக்களே இவ்வாறு கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுள்ளன.

தேர்தல் காலத்தில் மேற்கொள்ளும் தேவையற்ற வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தேர்தல் செயலகத்தில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள எந்தவொரு கண்காணிப்பு அமைப்பிற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வதந்திகள் வெளியிடப்பட்டதாக தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகங்கள் மற்றும் தேர்தல் செயலகம் ஆகியவற்றில் பவ்ரல் மற்றும் சீ.எம்.ஈ.வீ ஆகிய கண்காணிப்பு அமைப்புக்கள் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளன. (ஓ-4)

### யுனிசெவ் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தில் இயங்கும் தனியார்- தேசிய பாடசாலை உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் பச்சைக்கரும்பலகை, பிளாஸ்ரிக் வாளி, குப்பை வாளி உட்படப் பொருட்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று காலை 9 மணிமுதல் வழங்கப்படும். தவறாது அனைத்துப் பாடசாலைகளும் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக்கொள்கிறார். (2)

# நூற்றாண்டுக்கு முன்னான அரிய புகைப்படங்கள் கண்டுபிடிப்பு

முதல் உலகப் போரின் போது இந்தியாவில் பணியாற்றிய பிரிட்டிஷ் படைப்பிரிவை சேர்ந்த அதிகாரி ஒருவர் எடுத்த அரிய புகைப்படங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் படையை சேர்ந்தவர் வேலி லாங்கிரிஷ். இவர் முதல் உலகப் போரை ஒட்டி 1919இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அவ்வேளை தனது ஒன்பது படைப் பிரிவுகளின் வீரர்களுடன் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அச்சந்தர்ப்பங்களில் தாஜ் மகால் உட்பட பல இடங்களை தன் கமராவால் படம் பிடித்துள்ளார். இவ்வளவு ஆண்டுக்கு பின் இப்போது அவரின் அந்த அரிய புகைப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் அவரின் சக இராணுவீரர்கள் நீச்சலடிப்பது, ஒட்டகத்தில் பயணிப்பது, தாஜ்மகாலைச் சுற்றி பார்ப்பது என்று மொத்தம் 60 இடங்களில் எடுக்கப்பட்ட படங்கள் இருக்கின்றன.

இப்படங்கள் பிரிட்டனில் வின்செஸ்டரில் உள்ள ராயல் ஹேம்ப்ஷயர் ரெஜிமெண்ட் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதன் பாதுகாப்பாளார் மிக்கேல் ஸ்டீபன்ஸ் கூறுகையில், அவர்கள் இந்தியாவில் சுற்றுப் பயணம் முடித்துவிட்டு பின் ரஷ்யாவுக்கும் சென்றுள்ளனர் என்று தெரிவித்தார். இந்த புகைப் படங்கள் அடங்கிய ஆல்பம் ஏலத்துக்கு வருகிறது. (2-4)


சிற்றிஷன் போய்ஸ் செலக்சன் & ரெய்லரிங்

CITYSHAN BOYS SELECTION & TAILORING

JUKI, HARA, OVER LOCK, MACHINES மெசின், மெசின் உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள், நூல் வகைகள் அனைத்தும் கொழும்பு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்.



மற்றும்

யாழ். பல்கலைக்கழக 25 ஆவது பட்டமளிப்பு விழாவிற்கான கோட் மலிவு விலையில் வாடகைக்கும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இல.01, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை- இல 302,
பலாலி வீதி,
ஆலடிசந்தி, திருநெல்வேலி.
T.P.: 077 6143301

(சி/4769)


# விடுதலைப்புலிகள் போன்று தலிபான்களையும் இல்லாதொழிக்க வேண்டும்-பாகிஸ்தான்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை இலங்கை அரசாங்கம் இல்லாதொழித்தனைப் போன்று தலிபான் தீவிரவாதிகளையும் இல்லாதொழிக்க வேண்டுமென பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைப் புறங்களில் உள்ள மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பேஷ்வார் நகரில் இந்த கூட்டம் நடைபெற்றதாகவும தன்னார்வ தொண்டு அமைப்பு ஒன்றினால் இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாகவும் குறிப்பிடப்படுகிறது.

அதில் இலங்கை இராணுவம் மேற்கொண்டதனைப் போன்று யதார்த்தமான முறையில் இராணுவ தாக்குதல் நடத்தப்படவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)


தபால் மூல வாக்காளர் கவனத்திற்கும்

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு



| | | | |
|---|---|---|---|
| அரசியல் விற்பன்னர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா | ☂ | 2 | X |
| தமிழ் தேசிய பற்றாளன் சிவாஜிலிங்கம் | ☂ | 3 | X |
| மனித உரிமைச் சட்டத்தரணி (சிறைமீண்ட செம்மல்) கனகநமநாதன் | ☂ | 4 | X |

- கூட்டமைப்பு சிதைவுற்றதற்கு கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்படுபவர்களே காரணம்
- இவ்வாறு சிதைக்கப்பட்ட கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்படும் போது முன்னின்று உழைத்தவர்களில் ஒருவன்.
- அரச கெடுபிடிகளால் களுத்துறை தடுப்பு முகாம் சிறையில் மூன்று மாதம், மூன்று கிழமை தடுத்துவைக்கப்பட்டிருந்தவன்.

கனகநமநாதன்
(மனித உரிமை சட்டத்தரணி)

வெற்றியை நோக்கி விடுதலைக் கூட்டமைப்பு

(664)

# ரொபின் உத்தப்பா, வினேய் குமார் அசத்தல்

# சென்னை அணியை வீழ்த்தியது பெங்களூர்

(பெங்களூர்)

ரொபின் உத்தப்பாவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 18ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியிலும் தோனி பூரண உடற் தகுதியின்மை காரணமாக விளையாடாத நிலையில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணிக்கு சுரேஸ் ரெய்னா தலைமை பதவிவகித்தார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர்கிங்ஸ் அணித்தலைவர் சுரேஸ் ரெய்னா முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில்துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜக் கலிஸ் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 19 ஓட்டங்களுடன் பாலாஜியின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ராவிட், பாண்டியுடன் இணைந்து நிதானமாகத்துடுப்பெடுத்தாடினார். எனினும் ராகுல் டிராவிட் 11 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 14 ஓட்டங்களுடனும் மனிஷ் பாண்டி 28 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 20 ஓட்டங்களையும் எடுத்து முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 9.4 ஓவர்களில் 63 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் களமிறங்கிய உத்தப்பா, ஹோலி பிரகாசிக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் ஹோலி 16 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 24 ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க அடுத்துவந்த மோர்கல் ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்து வெளியேற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 16.5 ஓவர்களில் 116 ஓட்டங்களை எடுத்து 5ஆவது விக்கெட்டையுமிழந்தது.

எனினும் உத்தப்பாவின் அதிரடி அரைச் சதத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரொபின் உத்தப்பா 38 பந்துகளில் (3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 68 ஓட்டங்களையும் மார்க் பவுச்சர் 7 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல், பாலாஜி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 172 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆரம்பத்தில் சரிவு கண்டது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பார்த்திப் பட்டேல் ஒரு ஓட்டத்தைமாத்திரமெடுத்து ஆட்டமிழந்து வெளியேற சென்றை சுப்பர்கிங்ஸ் அணி ஒரு ஓவரில் 02 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை பறிகொடுத்தது.

அடுத்து இணைந்த ஹைடன்-பெய்லி ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்து.

எனினும் மத்யூ ஹைடன் 28 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 32 ஓட்டங்களும் பெய்லி 27 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9.4 ஓவர்களில் 59 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து வந்த முன்னணி வீரர்கள் பிரகாசிக்காத நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 135 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சுப்பிரமணியம் பத்ரிநாத் 17 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் மோர்கல் 19 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 19 ஓட்டங்களையும் அஸ்வின் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வினேய் குமார் 4 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், அனில் கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆவது போட்டியில் 4 ஆவது வெற்றியைப்பெற்று 8 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்தது.

இதேவேளை சென்னை சுப்பர்கிங்ஸ் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் 3ஆவது தோல்வியைச் சந்தித்தது.

## 2011 ஐ.பி.எல். தொடர்; செப்ரம்பர், ஒக்ரோபரில் வீரர்கள் ஏலம்

### லலித் மோடி அறிவிப்பு

அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் செப்ரம்பர், ஒக்ரோபர் மாதங்களில் நடைபெறு மென ஐ.பி.எல். அமைப்பின் தலை வர் லலித் மோடி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது உள்ள ஐ.பி.எல். அணிகளின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் 94 ஆட்டங்கள் நடைபெறும் இதற்கு மேல் ஐ.பி. எல். அணிகளின் எண்ணிக்கையை உயர்த்தமாட்டோம். அத்துடன் அடுத்த ஐ.பி.எல். போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பார்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

அடுத்த ஆண்டுக்கான வீரர்கள் ஏலம் செப்ரம்பர், ஒக்ரோபர்களில் நடைபெறும். வெளிநாட்டில் காட்சிப் போட்டிகள் நடத்த ஆலோசித்து வருகிறோம் என நான் கூறிய செய்திகள் வெளிநாட்டில் ஐ.பி.எல். போட்டிகள் நடத்தப்படும் என தவறுதலாக வெளியாகியிருந்தன.

இந்தியன் பிரிமியர் லீக் என்பது முற்றிலும் இந்தியாவில் மட்டுமே நடத்தப்படும். வெளிநாடுகளுக்கு போட்டிகளைக் கொண்டுசெல்லும் எண்ணமில்லை. தற்போது ஐ.பி. எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல் கத்தா நைட் ரைடர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்ஜாப், டெக்கான் சார்ஜர்ஸ், டில்லி டேர்டேவில்ஸ், ஆகிய 8 அணிகள் விளையாடி வருகின்றன தற்போது கொச்சி, புனே அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

மும்பை இந்தியன்ஸ் அணியை முகேஷ் அம்பாணியும், பெங்களூர் அணியை விஜய் மல்லையாவும், சென்னை அணியை இந்திய சிமெண்ட்ஸ் நிறுவனமும், ஐதராபாத், டெக்கான் அணியை டெக்கான் கிரானிக் கல் நிறுவனமும், கொல்கத்தா அணியை நடிகர் ஷாருகான், நடிகை ஜுகிசாவ்லாவும், பஞ்ஜாப் அணியை நடிகை பிரீத்தி ஜிந்தாவும், ராஜஸ்தான் அணியை ஷில்பா ஷெட்டியும் ஏற்கனவே வாங்கியிருந்தனர்.

ஐ.பி.எல். போட்டியில் பூனே அணியை சஹாரா அட்வென்ச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் குரூப் வாங்கியுள்ளது. கொச்சி அணியை ரூபாய் ஆயிரத்து 533 கோடிக்கு ராண்டஸ்வாஸ் ஸ்போட்ஸ் வேர்ல்ட் நிறுவன மும் வாங்கியுள்ளது.

புனே அணிக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆயிரத்து 702 கோடிதான் இதுவரை வாங்கப்பட்டுள்ள அணிகளில் மிக அதிக தொகையாகும் என லலித் மோடி குறிப்பிட்டார்.

## யுவராஜ் எனக்கு தம்பி மாதிரி; பிரீத்தி ஜிந்தா சொல்கிறார்




(சென்னை)

யுவராஜ் சிங் தனக்கு தம்பி மாதிரி என பஞ்சாப் அணியின் உரிமையாளரும் பாலிவுட் நடிகையுமான பிரீத்தி ஜிந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் 'மன்மதன்' என வர்ணிக்கப்படுகிறார் யுவராஜ். இவரது வலையில் கிம் சர்மா முதல் தீபிகா படுகோனே வரை நிறைய பாலிவுட் நட்சத்திரங்கள் சிக்கியுள்ளனர்.

இந்த முறை ஐ.பி.எல். கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். புதிய தலைவராக சங்கக்கார நியமிக்கப்பட்டார்.




இதனால் அதிருப்தியடைந்த யுவராஜ் கூறுகையில்,

அணியின் முக்கிய தலைவர் பிரீத்தி ஜிந்தா தான். கிரிக்கெட் தொடர்பாக நிறைய கற்றுக் கொண்டுள்ளார். ஒரு குடும்பம் போல அணியை பார்த்துக்கொள்கிறார்.

வீரர்களுக்கு சிறந்த உணவு, தங்குவதற்கு நல்ல ஹோட்டல் மற்றும் உரிய பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்கிறார். அனைவரும் சகோதரியாக பார்த்தாலும் நான்மட்டும் அப்படி நினைக்கவில்லை என நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

இதையடுத்து யுவராஜ் சிங் (வயது 28), பிரீத்தி ஜிந்தா (வயது 35) தொடர்பாக அதிகம் கிசுகிசுக்கப்பட்டது. இருவரும் மிகவும் நெருக்கமாக பழகுவதாக கூறப்பட்டது. இதனை கேட் பிரீத்தி ஆவேசமடைந்தார்.

தப்பா பேசாதீங்க ப்ளீஸ்... யுவராஜ் எனக்கு தம்பி மாதிரி. பஞ்ஜாப் அணி எனது குடும்பம் போன்றது. நாங்கள் அனைத்து விடயங்களையும் பகிர்ந்து கொள்கிறோம். அவ்வளவு தான் என்றார் பிரீத்தி ஜிந்தா.

தீவுப்பகுதி மக்களுக்கான உதவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உதவு பொருட்கள் வழங்குவதை படங்களில் காணலாம்.

## வன்னியில் உள்ள வாக்கா...

டுள்ளது.

வாக்களிப்பதற்கு இவர்கள் விண்ணப்பித்த நிலையில் இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்திலுள்ள நண்பர்கள், உறவினர்களது வீடுகளில் தற்போது வசித்து வரும் வாக்காளர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவில் அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள சொந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியும்.

அதற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகள் தேவைப்படுகின்ற வாக்காளர்கள் முன்கூட்டியே தமது விபரங்களைப் பதிவு செய்வதற்காக வவுனியா கச்சேரி வளாகத்திலும் வவுனியா மெனிக்பாம் பகுதியிலும் விசேட கரும பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்னித் தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த 32 ஆயிரத்து 154 இடம்பெயர்ந்த வாக்காளர்கள் அவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் தமக்கு வாக்களிப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 28 இடங்களில் அதற்குரிய வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசேடமாக மெனிக்பாம் பகுதியில் முகாமுக்கு வெளியே 10 நிலையங்களும் முகாமுக்குள் 8 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் மீள்குடியமர்த்தப்படாதவர்களுக்காக வாக்களிப்பு நிலையங்கள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளது.

இங்கு 32 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என வன்னி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ச. சுதாகரன் தெரிவித்துள்ளார். (எ-14)

## ஜானக...

செய்யப்பட்டுக் கடந்த ஒன்றரை வருட காலமாகச் சிறை வைக்கப்பட்டிருந்த 8 பேரை அநுராதபுர நீதிவான் தர்ஷிகா விமல சிறி விடுதலை செய்துள்ளார்.

போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் சட்டமா அதிபரின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த 8 சந்தேக நபர்களையும் விடுதலை செய்வதாக நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

ஜெய்னூர் ஆப்தீன் முசாபீர், அபுசாலி ஜபீல், நாவூர்கனி ஜெமீன், சுல்லான் அப்துல் அலி, மொஹமட் ஆனியா, ஆர்.தபோரூபன், எம்.சிவதாசன் மற்றும் அப்துல் கூத்தன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

உமார் அபிதாப் மற்றும் சுதாகரன் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

## வரவு...

மாதத்தில் வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியமைக்கும் அரசாங்கம் இந்த வரவு-செலவுத் திட்ட யோசனையை முன்வைக்கவுள்ளது. (எ-5)

# திருச்சியில் ரகளையில் ஈடுபட்ட 7 யாழ்ப்பாண இளைஞர்கள் கைது

(திருச்சி)

திருச்சியில் ரகளையில் ஈடுபட்ட ஏழு யாழ்ப்பாண இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

திருச்சி கே.கே. நகரில் உள்ள டாஸ்மாக் (மதுபானசாலை) கில் கடந்த 21 ஆம் திகதி தகராறில் ஈடுபட்ட ஏழு பேரை பொலிஸார் கைது செய்தனர்.

ஏழு பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் முறையான ஆவணங்கள் எதுவும் இல்லை. சென்னை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசித்து வருவதாகக் கூறிய அவர்கள் திருச்சியில் தனி வீடு எடுத்துத் தங்கியிருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

இலங்கைத் தமிழர்களுக்கு அவுஸ்திரேலியாவில் குடியுரிமை வழங்குகின்றனர். அதை வாங்கித் தருவதாக திருச்சியில் தங்கியுள்ள இருவர் கூறினர். அவர்களைச் சந்திக்கவே திருச்சி வந்தோம்.

நாங்கள் வந்து ஒரு வார காலமாகிவிட்டது. எனினும் எங்களுக்கு டிக்கெட், விசா எதுவும் வழங்கப்படவில்லை. அதனால்தான் டாஸ்மாக் பாரில் முக்கிய நபர்களின் சார்பாக பேச வந்தவர்களிடம் தகராறில் ஈடுபட்டோம். இவ்வாறு அவர்கள் ஏழு பேரும் கூறியதாகப் பொலிஸார் கூறினர். (எ-5)

# புலிகளின் அச்சம் காரணமாகவே இராணுவ முகாம்கள் அமைப்பு

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய சக்திகளிடமிருந்து மக்களைப் காப்பதற்காகவே இராணுவ முகாம்கள் நிறுவப்படுவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்த வலயத்தில் சுமார் 147 இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதாக அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

யுத்தம் ஆரம்பமான காலம் தொடக்கம் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. இடம்பெயர்ந்த மக்கள் உள்ளிட்ட சகலரையும் பாதுகாக்கும் நோக்கிலேயே இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களினால் எத்தனை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன என்பதைக் கூற முடியாது என அவர் மேலும் கூறினார்.

*(மற்றொரு செய்தி உள்ளே...)* (எ-5)

## நல்லூரிலுள்ள...

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினரான தியாகி திலீபனின் நினைவாக இத் தூபி அமைக்கப்பட்டிருந்தது. இத் தூபி கடந்த 2006 ஆம் ஆண்டு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## நயினாதீவு...

உறுதிப்படுத்தின.

நகர அபிவிருத்தி அமைச்சரின் பணிப்பின் பேரில் பௌதிக வளத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-1)

## நிபுணர்கள் குழுவை அமை...

இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை ஆராய ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் நியமிக்க உத்தேசித்துள்ள நிபுணர்கள் அடங்கிய குழுவுக்குச் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த இரு நாடுகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கின்றன. பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடுமையான அழுத்தங்கள் காரணமாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அமைக்க உள்ள இந்தக் குழு தொடர்பில் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்க ரஷ்யப் பிரதமர் விளாடிமீர் புட்டின் மற்றும் சீனத் தலைவர்கள் தெரிவித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்டத்தரப்பு தகவல் தெரிவிக்கின்றன.

பான் கீ மூன், குறித்த நிபுணர்கள் குழுவை அமைத்து அதன் அறிக்கையைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தால் சீனாவும் ரஷ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைத் தடுக்கும் எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இந்தச் செயற்பாடு குறித்து அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (எ-5)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.